உ

ஸ்ரீராமஜெயம்.

முருகன் றுணை.

# ஸ்ரீமத் ராமாயண ஸங்க்ரஹக் கப்பல், ஓடப்பாட்டு.

இவை

ப்ரம்மஸ்ரீ

திரு. அ. சிவானந்த ஸாகரயோகீசுவரர்

அவர்களுடைய மாணாக்கனாகிய

சேலம் ப்ரம்மஸ்ரீ

வரகவி, S. T. வெங்கடராயரவர்களால்,

இயற்றி,

தூத்துக்குடி, பிராமின் காலனியில்


சில புண்யவான்கள் செய்த பொருளுதவியால்

தூத்துக்குடி

நேஷனல் பிரின்டிங் பிரஸில், பதிப்பிக்கப்பட்டது.

முதற்பதிப்பு காப்பி (1000)

1940-ஹு டிசம்பர் மீ விக்கிரம ஹு தை மீ.



சேலம், ப்ரம்மஸ்ரீ
வரகவி, S. T. வெங்கடராவ்

உ

ஸ்ரீ ராமஜெயம்.

# முகவுரை.

உலகுய்யத் தோன்றிய இதிகாச ரத்னம் இராமாயணம். பல வித்வான்கள் தங்கள் மதிநலத்தின் மாட்சிவிளங்க பல்வேறு துறைகளில் கவிதை புனைந்து அதனைப்பாடியுள்ளார்கள். நவரசங்கள் ததும்பும் காவியமானதால் சமயவேறுபாடின்றி, இராமாயணம் யாவராலும் போற்றப்பட்டு வருகின்றது. கம்பர், அருணாசலக் கவி போன்ற அருட்கவிகள் கர்ணாமிர்தமான செய்யுட்களியற்றி மக்கள் உள்ளத்தைக் கவர்ந்துள்ளார்கள். மற்றும் மக்கள் எளிதில் மனனம் செய்ய வெண்பா, சிந்து முதலிய துறைகளில் பாடியுள்ளதும் நான் அறிவேன். இப்பொழுது வெளிவரும் இந்நூலை கப்பல் துறையில் ஆக்கப்பட்டது. முக்கியமாக நமது பெண் மக்களும் இலகுவாய்ப் படித்து மனனம் செய்ய ஏற்றதாயும். காவிய ரசமும், சொற்சுவை, பொருட்சுவைகளும், சந்தவின்பமும் தம்மில் ஒன்றாய்க்கலந்து தேனும், பாலும், அமுதும், கன்னலுமாகித் தித்திக்கும் வண்ணம் இந்நூல் அமைந்துள்ளது. இதனை ஆக்கித் தந்தவர் சேலம், ப்ரம்மஸ்ரீ வரகவி S.T. வேங்கடராவ் அவர்கள். இவர்களை எனக்குப் பல்லாண்டுகளாகத் தெரியும். விரைந்து சுவை மிக்க தமிழ்கவி பாடுவதில் வல்லவர். அன்னார் பார்வதி கல்யாணம், தக்ஷயாகம், ஸ்ரீ வெங்கடேச கல்யாணம் முதலிய புண்ணிய சரிதங்களை செய்யுட்களாகத் தமிழில் இயற்றியுள்ளார்கள். அவைகள் சீக்கிரம் நூற்களாய் அச்சிட்டு வெளிவரவேண்டுமென்பது என் அவா. இந்நிலையில் இந்நூலை அச்சிட்டு வெளிவருவதற்கு உதவி செய்த புண்ணியவான்களுக்கு தமிழுலகம் நன்றி செலுத்த கடமைபட்டுள்ளது. இந்நூலாசிரியர் பல்லாண்டு வாழ்ந்து தம்பணிகளைக் குறைவற நடத்த எல்லாப் பேறுகளையும் அவர்க்கு அளிக்குமாறு, எம்மிறையைப்பிரார்த்திப்பதோடு, சொற்பவிலையுள்ள ஏற்றமிகுந்த இந்நூலை அனைவரும் ஆதரித்து மென்மேலும் நூல்கள் ஆக்கித்தர ஊக்கமும் உற்சாகமும், இந்நூலாசிரியருக்கு அளிப்பார்களென்று திண்ணமாய் நம்புகிறேன்,

A. இராமமூர்த்திராவ் B.A., B.L.,

வக்கீல்.

தூத்துக்குடி,
25—12—40.

# சாற்றுக்கவி

விருத்தம்

சீரிய ராம கதையை முன்னம்
        தெய்வ மாமுனிவனுங் கூற
பாரினில் தமிழர் பயின்றிடக்கம்பன்
        பரிந்து மேவிருத்தப்பாச் செய்தான்
சேரவே யருணாசலக்கவியிசைசேர்
        செஞ்சொலிற் கீர்த்தனை பாட
பேரிய வரகவி வேங்கடராயன்
        பேணிய கப்பலோங்கிடவே.

R. முத்தையர்,
தமிழ் & ஸங்கீத வித்வான்,
தலைமைத் தமிழ் பண்டிதர்,
ஸ்ரீ மந்திரமூர்த்தி ஹைஸ்கூல்,
5—12—40. திருநெல்வேலி.

## விநாயகர் துதி

ஆதிகாவியமதாக அறையும் ராமாயணத்தைத்
மேதினிதனிலே மூவர் மெய்யன்பாய்ச்செய்ததொத்து
நீதிசேர் தமிழில்கப்பல் நீர்மையார் பாட்டியற்ற
ஆதிதேவாம் கஜமுகனுன் அடிமலர் போற்றி போற்றி.

## சாஸ்வதி துதி

தரைமிசைராமகாதை தமிழிலோர்கப்பல் பாட்டாய்
சரிவர இயற்றியேழுஸாகரம் சூழ் வைப்போரும்
பரிவுடன் கேட்டுணர்ந்து பரமார்த்த மெய்தி ஓங்க
ஸரஸிஜன் ராணிவாணி சார்ந்தவாக்கருள்வாய் போற்றி.

## முருகன் துதி

ராகவன் சரிதமென்னும்ராமாயணத்தை ஸ்வாநு
போகமாயுணர்ந்து உண்மைப்பொருள்வளர் தமிழில்கப்பல்
ஆகவோர்நூலியற்றி அறிஞர்களும் உவப்ப
ஸாகரசயனன்மருகா ஷண்முகா போற்றி போற்றி.

உ

ஸ்ரீராமஜெயம்.

முருகன்றுணை.



ஸ்ரீ ராமாவதாரத் திருவிளையாடற்

சிறப்பென்னும்,

# ஸ்ரீமத் ராமாயண லங்காஹக்கப்பல்,

## ஓடப்பாட்டு.

---

ஏலேலோ ஸ்ரீராமஜெயம் கோவிந்தா
எவ்வுலகும் ஸ்ரீராமமயம்
பாலாழி யில்துயிலும் கோவிந்தா
பக்தஜன பரிபாலனே
கோலாஹ லமாயோங்கும் கோவிந்தா
கொடியவரை வதைக்கத்திரு
மாலேஸ்ரீ ராமனுனே கோவிந்தா
மாநிமையைப் பகர்ந்துய் வேனே

முடுகு.

(1) ஆதியில் இந்த்ராதிதேவர் முனிவோருன்
அயர்ந்து ராவணனுதி அசுரர்கள்செய்யும்
கோதினுலற்ற மிகசொடுமையால் தாம்செய்
குணமருள் சற்கருமம்யாவும் அழிந்தும்

வேதாதிபாராயணம் வேள்வித்தவமும்
வெகுசிறப்பாயோங்கி நிகழவொட்டாமல்

பாதகர்களாய்க் கொடிய அசுரர்செய்யிடரால்
பகரொணாத்துன்பங்களால் நிலைகுலைந்து

ஏதுசெய்வோமென்றேக்கம் மிகுந்து
எல்லோருங்கூடியாலோசித்து ஒன்றாய்

நீதிபோல்பரமேஷ்டியின் சமூகம்சேர்ந்து
நிகழும் தம்நலிவுகளை நேராய்ப்புகன்று

ஆதரங்கூர்ந்து பரிபாலிக்கவென்று
அக்ஷிகண்ணீர்சொரிந்தடி பணிந்தேற்ற

வேதனுள்க்ருபைகூர்ந்து வேண்டிவந்தோர்க்கு
விமரிசையதாகச் சமாதானங்கூறி

ஆதிமூலன் ஸ்ரீமந்நாராயணன்பால்
அடைக்கலம் புக்காலவன் காப்பானென்று

வேதன்முதலமராதி முனிவோர்களெல்லாம்
வேகமாய்ப்பாலாழிக் கேகியங்கிலகும்

வேதமெய்ப்பொருளான வீகமனன்முன்பில்
வேறுகதியிலையென்று சரண்சாற்றிபோற்றி

மாதவா தசகண்டனாதிய சுரர்கள்
மண்விண்பாதாளமெனும் மூவுலகங்களையும்

கோதிழைத்தவர் செய்யுங்கொடுமையைப்போக்கி
கொண்டல்வண்ணனே தயைகூர்ந்துகாவெனவே

ஸ்ரீ தரன் திருக்கண் கடாக்ஷித்து நீங்கள்
சிறிதுமஞ்சாதீர்களென்ற பயமீந்து

மேதினியில்தானே ஸ்ரீ ராமனாய்த்தோன்றி
மேன்மைசேருங்களிட அல்லல்களைந்து

கோதுருவமாயுள்ள கொடியரைவதைத்து
குசலமாயுலகங்களைக் காப்பேனென்று

ஆதரங்கூர்ந்தனைத்தடியார்களின்பால்
அறுதிசடனனன் பாக செய்தானோராக்கை

அவனியில்நீங்களும் அம்சபூதமதாய்
அளவற்ற பலவிதக்குரங்காயுதித்து

ஆரண்யமாதி பெருமலைகளில்வசித்து
ஆற்றல்மலிந்து வாழ்ந்திருங்கௌண்ரோதி
ஆதிமூலப்பொருள் ஆனவொரு ஸ்ரீமந்
நாராயணன் அருள்கூர்ந்தேகச்செய்து

பூதலம்புகழுமய் யோத்திவேந்தன்செய்
புத்ரகாமேஷ்டியின் பூர்ணபலனாய் பூங்
கோதைகௌசலை கற்பவாஸம்செய்தீசன்
குசலமருள் ஸ்ரீராமனாயுதித்தானும். (ஏலேலோ)

(2) பருதியொளிநிகர்சக்ரம் கைகேசிகர்ப்பத்தில்
பரமாத்மனுக்கிணைபோல் பரதனாய்த்தோன்ற
காஞ்சனபீதாம்பரதரன் சொல்போலுயர்சங்கம்
கழரொணாவலிமைமிகும் சத்ருக்னனாயும்
வாஞ்சிதபலன்களருளீசன் சயனமதான
வாஸுகியின் முன்னவனி லக்ஷ்மணனாயும்
தாஞ்சற்றுங்கருவம் கொள்ளாமல்விளங்கும்
தருணிமணியான சுமித்திரையின்புத்திரராய்
பார்மீதிலிவ்விதம் ஸ்ரீசன்மானிடராய்
பானுகுலனான தசரதவேந்தனுக்கு
ஆர்வமிகும் புத்திரராயவதாரமாகி
அன்னை தந்தைகளுக்கானந்தமீந்தும்
நேர்மேவும்விசுவாமித்திரன் பின்தொடர்ந்து
தீயியாம்கொடிய தாடகையைவதைத்து
சீர்மேவகௌசிகன் செய்யிஷ்டிநிறைவேற்றி
சிலையைப்பெண்ணாக்கி மிதிலாபுரிக்கேகி
சிவன்வில்லைத்தொடித்தவனி ஸீதையாயும்
ஸ்ரீலெக்ஷ்மியான ஜானகியையணைந்து
மதிமகிழ்வாக ஐயோத்திசெல்வழியில்
மாண்பலமிகும் பரசுராமன்மதம்போக்கி
சதிராகசாகேதநகர் சேர்ந்துசுகமாய்
சற்சகோதரருடன் அன்பாய்விளங்க
அதிமாக்ஷிவாய்ந்த ஸ்ரீராமனுக்கரசன்
அரசுமுடிசூட்டநேமிக்க கைகேசி

சதிசெய்தவாருக ஸதியுமநுஜன்ஸஹிதம்
சந்தும்மனம்கோணுமல் மரவுரியுடுத்து
விதியாதியோர்கள்பால் விண்டசொல்நிறைவேற்ற
வீகமனன்கான்புக்கு குகனைநேசித்து
மதிமகிழ்வாய்பரத்வாஜ ராஸியுமேற்று
மாண்வலிஸ்ரீராமன் வனவாஸம்சென்ருரும்.
(ஏலேலோ)

(3) இத்தகையவித மிக்ஷ்வாகுகுலதிலகன்
இன்பமாய்மனைவியுடனநு ஜன்ஸமேதம்
உத்தமகுணத்தோன் கோராரண்யமேவி
உயர்சித்ரகூடத்தில் மகிழ்வாயிருக்க
சத்யஸ்வரூபனுயோங்கும் பரதாழ்வான்
சதிராகபாட்டனிடம் விடைபெற்றுவேகம்
நித்யமங்களமாய்விளங்கும் அயோத்திக்கு
நிர்மையாய்வர நகரம்நிலைவேறுபட்டு
எத்திசையுமிருள்சூழ்ந்து ராமராமாவென்று
எங்கிவாய்விட்டலறி துயர்க்கடலிலாழ்ந்து
விதமாயிருப்பதை பரதனெவ்வொருவரையும்
வினவியும்விளங்காமல் அன்னையைக்கேட்க
புத்ரவாஞ்சைமேவி கைகேசிமகனை
பூபாலனையென் புத்ராத்தினமே
இத்தரையைநீயாளவும் ராமனடவி
ஈரேழுஆண்டாள தான்செய்தவகையை
அத்தருணம் தானறைந்தாருயிர் மகனுன்
அய்யன்திருநாடெய்தி ராமன்வனம்சென்ருன்
எத்தகையவிதத்திலும் இடருனக்கணுகா
தெழிலரசு முடிபூண்டிந்நகராள்வாயெனவே
உத்தமப் பரதனிவ்வார்த்தைகேட்டுடனே
உயிரற்றவன்போல் விழுந்தந்தோவென்று
சித்தமதிலயர்வுற்று அன்னையைகடிந்து
சீச்சீச்சிபெண்ணலகையே யென்றுரைத்தும்
எத்திசையும் புகழுமிச்சூரியகுலத்திற்கு
என்றுமழியாத பழிதேடிவைத்தாயென்

கத்தியாலுனது தலையற்று விழக்கொய்வேன்
　　காகுத்தனுக்காக பயந்து பின்னுற்றேன்
பார்ப்பவர் கண்களுக்குக்கரிவை போலுற்றையே
　　படுபாவி குலநாசி யுன்கற்பத்தில் நான்
ஏற்பட்டதாலிந்த பாபத்துக்காளாய்
　　என்னையும் ஆக்கியென் பிதனை மாய்த்தும்மா
நார்ப்பட்டுடுத்தி ராகவனையும் விரட்டி
　　நங்கையாய்த் தோன்றி பெருமையுற்றவளே
சீர்ப்பட்டு ஸ்ரீராமனிடம் வரும்வரையில்
　　சீரழித்தவளெயுன் முகம் பார்க்கேனென்று
சீர்மேவும் கௌசலையுடன் சுமத்திரையின்
　　சீரடிபணிந்து பலசத்யங்கள் செய்தும்
நேர்மேவும் ஸ்ரீராமனை நான்சென்றிந்த
　　நிமிஷத்திலேயழைத்திங்கு வந்துடனே
பார்மேவுமயோத்தி நகராசுமுடியை
　　பாங்காக அண்ணனுக்கேசூட்டிவைத்திப்
பேதைநானேற்ற வசைவாக்கைத்தவிர்த்திப்
　　பேருலகில் ஸ்ரீராமனுக்கேவல்செய்தும்
ஆதிமுறைதவறுமலராசாங்க கார்யங்க
　　ளணுவும்வழுவாமல் நிறைவேற்றுவேனென்று
அக்ஷிகளில்நீர்சொறிய அங்கம்தளர்ந்து
　　ஹாவென்றுபெருமூச்சு விட்டுள்ளயர்ந்து
அத்தருணமேபரதன் ஆரண்யமேவி
　　அன்பன்குகனுடன் பரத்வாஜரையும்கண்டும்
அத்திகோளரிவ்யாக்ரயாதி மிருகங்கள்
　　அடர்ந்துலவும் கானகங்களிலும்மலைகளிலும்
புத்தியிலுயர்பரதன் ஒவ்வொருவிடத்தும்
　　புருஷோத்தமன் ஆன ராமனைத்தேடி
அத்தனேகௌசலாபுத்ரனே யெந்தன்
　　ஆத்மஸ்வரூபமாயிலகும் ராகவனே
இத்தருணமிவ்வடியேன் மீது தயைகூர்ந்தென்
　　இறைவனே இனகுலஸ்ரேஷ்டனே வருக

நித்தனே நிர்மலா நிஷ்களா வருக
    நீண்டோங்கும் கோதண்டக்கையனே வருக
ஐயனே வருக மெய்த்தூய்யனே வருகவென்
    ஆருயிர்க்குயிரான அண்ணனே வருக
என்றிந்த விதமாக யேங்கிவாய்விட்டு
    என்னையனே வருகவென்றலரிகூவி
சென்றகோராரண்ய மாதிகளில் தேடி
    செங்கைகள் சிரசின் மேல் கூப்பி பரதாழ்வான்
சித்திரக்கூட வெற்பில் வஸித்தோங்கும்
    ஸ்ரீராமனைக்கண்டு போற்றிப்பணிந்து
சித்தசுத்தியதாக அயோத்தி நகரம்
    சிறப்பற்ற சங்கதிகள் யாவும் புகன்று
அத்தனே அடியேன்பால் தயைகூர்ந்து வந்து
    அயோத்திபுரியாளி அரசுமுடி பூண்டு
எத்தகையிலுள்ளோரும் வசைச்சொல்களென் மேல்
    ஏத்திச்சுமைத்தியதைப் போக்கியடியேனை
இத்தருணம் காப்பாற்றுவாயென்று வேண்டும்
    இளவலாம் பரதன்பால் ராமன் க்ருபைகூர்ந்து
சித்தமதை தெளிவித்து பரதன் வேண்டல் போல்
    சீர்மேவும் தன திருப்பாதுகைகள் தரவே
பக்தியாய்த் தொழுதந்தப்பாதுகையை பரதனிரு
    பாஹுவில்வாங்கியதை தன் சிரஸிலேற்றி
        நத்திவந்தோர்களுடனே பின் திரும்பி
        நந்திக்ராமந்தன்னில் பாதுகைக்கரசு
        எத்திசையும் புகழ முடிசூட்டி பரதாழ்வான்
        ஏற்ற ஸ்ரீராம தவம் செய்தோங்கினனும்.
            (ஏலேலோ)

(4) இத்தகைய விதமாக ஸ்ரீராமன் மகிழ்வாய்
    இசைந்த தன் மனைவியுடனநுஜன் ஸஹிதமாய்
உத்தமப்புண்ய நதிகளில் ஸ்நானம் செய்தும்
    உயர்ந்த தபலமுனிவர்களைக் கண்டுவந்தும்
அத்திரிமாமுனிவரையும் அவர்மனைவியனசூயை
    அம்மனையும் தரிசித்து அவராசிபெற்றும்

மகத்துவமலிந்த சரபங்கரைக்கண்டும்
மாண்புகழ்மிகும் அகத்தியமுனிவரின்பால்
சித்தசுத்தியதாயருள் செய்மந்திரமும்
சிறந்தவில்லும் திவ்யாஸ்திரங்கள்பலபெற்றும்
உத்தமன்அடர்கானிலுல வித்திரிந்தங்
குள்ளராக்கதர்களை ஹதமாக்கிமென்மேல்
ஊர்ஜிதமாயடவியாத்திரை செய்துராமன்
உலகங்களைக்காக்கும் பொருட்டேவில்லேந்தி
அதிமூர்க்கனும்விராதனை சேனையுடனே
அயராமல்சமரிழைத்தனைவரையும் மாய்த்தும்
மதிமகிழ்வாய் தண்டகாரண்யம்சென்று
மனமயர்ந்துழலு முனிவோர்க்கபயமீந்து
அதிமேன்மையாம் பஞ்சவடிசேர்ந்துசுகமாய்
அநுஜனுடன்ஸதி ஸஹிதமாங்குற்றனும்.
(ஏலேலா)

(5) காகுத்தன்பஞ்சவடி தனிலுற்றசமயம்
கடுமூர்க்கிசூற்பனகை தசமுகன்தங்கை
சாகஸத்தாலுலகை சாற்றொணாக்கொடுமை
சார்வகாலத்திலும் செய்யும்ராக்கஸியாம்
தாகவிடாய்மேலிட்டு பஞ்சவடிக்கேக
தாசரதியைக்கண்ட க்ஷணத்தில்தான்
மோகவிடாய்மேலிட்டுபாவி சூற்பனகை
மூன்றுலகுளோரும் கண்டயரும்தன்வடிவை
மூர்க்கிதன்மாய்கை யாலப்ஸரஸ்போலாகி
முழுமதிநிகர்வதன ராமன்முன்னெய்தி
சீர்க்கினியமதுரமொழி பற்பலதுவிண்டும்
சித்தஜன்கலைக்குறிப்புகள் சிலதுகாட்டி
யார்க்கும்வசமாகாத ஸுந்தரிநானுந்தன்
அங்கசுந்தரங்களுக்கீடே படலானேன்
மூர்க்கங்கொள்ளாமலென்னை நீ மணந்தென்
மோகத்தைதீர்த்துவைப்பா யென்றுவேண்ட
நேர்க்குநேராய்ராமன் நீதிகளனேகம்
நிகழ்த்தியும்கேட்காமலவள் வற்புறுத்த

பார்க்குள் செய்கார்யங்களுணர்ந்தோங்கும் கோதண்ட
பாணியவளையிளவலால் பங்கம்செய்ய

தக்ஷணம்சூர்ப்பனகை ஜனஸ்தானமேவி
தன் துணைவரான கரனாதியர்கள்பால்

லக்ஷணம்அற்றதன் விஷயம்புகன்று
லண்டி சூர்ப்பனகை வாய்விட்டலறியழவே

அக்ஷணம் கரன் தூஷணன் த்ரிசிரர்மூவர்
அளவிலா சேனையுடன் வந்துராமன்பால்

லக்ஷியம்வைத்து போர்புரியஸ்ரீரகுவீரன்
லகுவாகயாவரையும் சமரில்மாய்த்தோங்கும்

விந்தைதகண்டுடன் சூர்ப்பனகையுள்கலங்கி
விரைவாகவேயிலங்கைக் கேகியேதான்

சுந்தரிஜானகி விஷயம் யாவும் தமையன்பால்
சொல்லிநீயத்தலசிறுகியுடன் வாழ்ந்தால்

எந்தன்மனமகிழுமென்றுவ லேற்றிடவே
எழுடன்மூன்றுசிரமுள்ள வசரேசன்

சிந்தைவஞ்சகமாக சொன்னதங்கைவாக்கால்
சீக்கிறமாய் மாரீசனைக்கனகமானாய்

வேகம் நீ ஸ்ரீராமனிருப்பிடத்திற்கேகி
வேடிக்கையாயங் குலாவித்திரிந்து

ஆராமனைசற்று அகலச்செய்வாயென்று
ஆச்ஞாபனம்செய்யகேட்டு மாரீசன்

மாராரிமலையைபேர்த்தெடுத்தவனே யென்னருமை
மருகனேயென்சொல்லும் வார்த்தைதனைக்கேட்பாய்

ஸ்ரீராமன்சிறுவனாயிருக்கும் போதவனெய்த
சிறந்தபாணம்பட்ட புண்ணாறவில்லையே

ஸ்ரீராமனென்றவன் பேர்கேட்கும்போதே
சித்தமயர்ந்துடலுயிரும் நடுக்கிடுதென்செய்வேன்

அப்பப்பஅவனிருக்கும் திக்கைநோக்கேன்
ஐயனேஅடியேனை மன்னிப்பாயென்று

இப்படிப்பலவிதம் பணிந்தேத்திபோற்ற
இலங்கேசன் மாரீசனைப்பார்த்துமொழிவாய்

இப்பொழுது நீ யெந்தன் வாக்கை மறுத்தால்
எமனுலகு நீ சேர்வாயென்று வாளோங்க
அப்பொழுது மாரீசன் யோசித்துப்பார்த்தென்
ஆயுளெனக்கின்றற்றதென்றுள்ளில் தேர்ந்து
மைப்பாவும் அசுரேசன் கையில்மாழ்வதிலும்
மாக்ஷிசேர் ராமன் கணையால் மாழ்வதுசிதம்
என்றுள்ளில் தீர்மானம் செய்து மாரீசன்
இருபத்துக்கையோனுரைத்தவாறாக
பாரோர் கண்டாச்சரியப்படும் கனகமானாய்
பஞ்சவடிக்கதிவேகம் சென்றுபடுபாவி
காரார்குழலி சீதையின் முன்விளையாடி
காகுத்தனை வஞ்சித்ததிதூரம் சேர்க்க
பாரோரும் விண்ணோரும் பார்த்தயரும் மாகொடிய
பாபி ராவணன் சன்யாசி வடிவாய் வந்து
சீராரும் ஜானகியை கவர்ந்திலங்கை சேர்ந்து
சிறந்தயர சோகவனத்தில் சிறைவைத்தானும்-(ஏலே.)

(6) மாயாவிமாரீசன் செய்தவஞ்சனையால்
மனதில் தியக்குற்றென்ன நேருமோவென்றுள்
ஆயாஸமேவிவரும் வழியிலெதிரில் தன்
அநுஜனைக் கண்டவுடனவனைக் கடிந்தும்
காயாம்பூவண்ணன் சௌமித்ரி சொல்கேட்டு
கருத்தின்னதென்று விளங்காமல் துயரெய்தி
அதிவேகம் சென்று தன்னிருப்பிடம்பார்க்க
ஆருயிர் ஜானகியைக் காணாமலேங்கி
விதியை தான் நொந்து வாய்விட்டலறியேயென்
வைதேஹி நீயெங்கு சென்றாயோவென்று
மலைகுகை கானகங்களில் தேடி ஓயாமல்
மதிங்கர் ருமகிஸீதா ஹாஸீதா வென்றும்
கலை புனுகுபூனை இளி மயில்களேயெந்தன்
காதலியைக் கண்டீர்களோவென்றலைந்து
எங்கெங்கும் தேடியோடித்திரியும் வழியில்
ஏற்றசிரகறுபட்டு மரணாவஸ்தையதாய்

அங்கமுழுதும் ரக்த மயமாய்க்கிடக்கும் ஜ
டாயுதன் மனைவி சங்கதிசாற்றிமடிய
திங்கள்முக ராமனதிதயருந்றமே தன்
சிற்றப்பன் முறையான பக்ஷீந்த்ரனுக்கு
புங்கவன் ஸ்ரீராமனே சாமக்கிரியை
புத்ரனாய்த் தான்செய்து மோக்ஷபதமீந்தும்
எங்கெந்தன் ஜானகியைக் காண்பேனென்று
ஏகும்மார்க்கத்தில்தான் சபரியைக்கண்டுன்
உற்றநலிசற்றற்ற அவளன்புடன்யீந்த
உயர்ந்த நற்கனிவகைகளுண்டவள் செய்யும்
நற்றவப்பலனோங்க மோக்ஷமவளுக்கருளி
நாயகியைத் தேடியே விரைந்தேகும் வழியில்
கமன்போலுறும் கபந்தனைக்கொன்ற மாத்ரத்தில்
கவிலுமவன்றுதியேற்றுள் நற்கருணைகூர்ந்து
கிமைகொட்டு முன்னவனை விண்ணேகச்செய்து
நீண்டகோதண்ட தானநுஜனுடனே தான்
ரிசியமுக வேற்பேக அவிடத்தினில் சூ
ரியபுத்ர சுக்ரீவனெனுமர்க்கடேந்த்ரன்
பரியினும் சொந்த தமயன்செய் நலிவாய்
பயந்திருப்பவனுக் கமைச்சனாயுள்ள
வாயுஸூனுல் சீதைவரலாறுணர்ந்து மவன்
வண்மைசேராபரண முடிப்பும் தானேற்று
நேயமாய் சுக்ரீவசக்யம் செய்துடனே
நிகரற்ற தன்வலிமை காட்டும்பொருட்டு
வட்டமாய் வளர்தருக்கள் ஏழையும் ஓர்
வன்பகழியால் துளைத்தூடுருவச் செய்தும்
இட்டமாய்த் துந்துபியி னஸ்திமலையைத் தன்
திருவடியின் பெருவிரலால் எத்தியதை யெறிந்தும்
இட்டனாம் சுக்ரீவனுள் சங்கையறவே
இனகுலேசன் தனது வலிமையையும் காட்டி
அட்டதிக்கும் புகழும் அமரேசன் சுதனை
ஆற்றல் மிகும்வாலியை யோரம்பால் வதைத்தும்

எட்டுணையும் நீயென்று பணியும் சுக்ரீவனுக்
கேற்ற கிட்கிந்தை நகராசு முடிசூட்டி

சட்டமாய் என்மனைவி ஜானகியிருக்கும்
ஸ்தலமதை யுன்னாட்களைக்கொண்டு தேடி

ஓயாத என்மனக் கவலையகன்று
ஓடவே கண்டுவரவென்று ஸ்ரீராமன்

நேயமாய் சுக்ரீவனுக்காக்ஞை செய்து
நெடியகோதண்டதான் ஸௌமித்திரி ஸஹிதம்

மனதிலெழும் ஆயாத்தை அநுஜனன் பாய்த்தேற்ற
மாலியவான் பருவதத்தில் வசித்தோங்க

வானராதிபனான சுக்ரீவன் தன்னுடைய
வானரச் சேனாதிபதிகளிலுயர்ந்தும்

ஞான வானும் மிக்க பலவானுமாயும்
ஞாயிறு வால் வேதங்கள் கற்றவனுமாயும்

வானுலகுளோரும் யிம்மானிலத்தோரும்
வாழ்த்திப் புகழ்ந்தேற்றும் வலிமைவாய்ந்தில நம்

ஹநுமானை ராமன் பாலழைத்தேகியிவனே
அவசியம் பிராட்டியாரைக் கண்டுவருவான்

அநுமானமேயில்லை யென்றரைய ராமன்
அன்பாய்த்தன் கணையாழி அடையாளமாக

மனமாறவே ஆஞ்சநேயன் கைலீந்தென்
மனைவியைக் கண்டவருக்கிம்மோதிரத்தை

அநுகுணமாயீந்தெந்தன் க்ஷேமங்களும் சாற்றி
அவளிடமு மடையாளமாக வேதேனும்

ஹநுமானே நீ வாங்கி வருவாயென்றுசி
அன்பாய்ப்புகன்று ஸ்ரீராமன் விடையருள

அரசனும் சுக்ரீவனிடமாக்ஞையும் பெற்று
அன்னை தந்தை குருவினடிமலர்கள் போற்றி

ஒருநூறு யோசனை விரிந்துள்ள கடலை
ஊர்ஜிதமாகவே தான் தாண்டுதற்கு

மாஹேந்த்ரகிரி மீதிலேறினன் றனுமான்
மாகதிசேர் லங்கையிருக்கும் திக்கைநோக்கி

ஆஹாவென் றிமையோர்கள் பார்த்துள் வியப்ப
அமைந்த தன் விசுவ வடிவெடுத்து கபீஸ்ரேஷ்டன்

ஆகாய மார்க்கமாய் கடல்தாண்டும் சமயத்தில்
அமரர் மாருதியின் வல்லமை யுணரவைத்த

ஆகாயமேவும் ஸுரஸாதேவியின் வாயில்
ஹநுமான் புகுந்தவள் செவிவழி கிளம்பி

ஸாகாயம் பரந்தாவி தானேகும் தருணம்
வல்லமைசேர்சாயாக்ர ஹணியாதி கொடிய

தேகாதிபருத்துயர் அங்கார தாரையையும்
தேவகார்யத்து ரந்தரனுமன்மாய்த்தும்

அதிவேகம் கடல் தாண்டி லங்கையில் குதிக்க
அங்கோராக்கி யிலங்கணியெனும் மூர்க்கி

ஆரடா செல்பவன் என்றவள் தடுத்து
அதிமுனிவாய்க்கையோங்கி ஹநுமனையெதிர்க்க

சங்கையுள் சற்றேனும் கொள்ளாமலநுமான்
சார்ந்த அவ்விலங்கணியை யோரரையால் மாய்த்தும்

எங்கெங்கும் லங்கைமா நகரிலாராய்ந்தும்
ஏற்ற பற்பல வடிவெடுத்தும் தான்தேடி

கும்பகர்ணன் இந்த்ராஜித்தனரண்மனையும்
குடிலராயுள்ள பல அரக்கர் மனைகளிலும்

அம்புஜாக்ஷன் ஆனராமன் பத்தினியை
அணுவாதி பலரூபங்கள் கொண்டுதேடி

அசுரேச ராவணனரண்மனையும் பார்க்க
அவனுடன் படுத்துறங்கும் மண்டோதரியை

குசுமாக்ஷ ஸ்ரீராமன் தேவியிவளோவென்றும்
குறிப்புணர்ந்திவளோராக்கியென தேர்ந்து

எழுநூறு யோசனை பரப்புள்ள லங்கையில்
எங்கெங்கும்தேடி ஜானகியைக் காணாமல்

மழுவால் பிளந்த பெருமரம்போல் மாருதி தன்
மனம் பிளக்கப்பட்டு பெருமூச்செறிந்து

எழுவான் கீழ் விழுவான் ஸ்ரீராம ராமாவென்று
என்னையன் ராமனுக்கென்சொல்வேனென்று

அழுவான் தன்னிருகண்களில் ஜலம் பெருக
　　அம்மை ஜானகியெனக் கருள்புரிவாயென்றும்

ஒரு தடவை ஸ்ரீ ராமாவென்றுச்சரித்தால்
　　உலகிலெக்காரியமும் கைகூடும் என்று

சரிவரச் சான்றோர்கள் சாற்றியுள்ளனரே
　　சஹஸ்த்ர நாம ராமன் பேரடியேன் புகன்றும்

விரிசெறிகுழல் சீதா தரிசன மெனக்கிங்கு
　　விரைவிலாகாத விதமேதோ வென்றேங்கி

இவ்விதமதாயுளம் நைந்தாஞ்சனேயன்
　　இருக்கவே ஸ்ரீ ராமச்சந்த்ரன் பேரருளால்

மங்கையர்க் கரசியாயோங்கும் ஜானகியை
　　மாருதிய சோகவனத்தில் கண்டுமே தான்

அங்குள்ளவைகளாராய்ந்து தருமீதில்
　　அதிருப்தமாயிருக்கும் சமயம் சீதை

அரக்கேந்த்ரன் சொல் தீச்சவாக்காலுன் சோர்ந்தும்
　　அரக்கியர் செய்கொடிய வினையாலுழன்றும்

சிரக்கொழுந்தான திரிசடையாலுள் தேர்ந்தும்
　　சித்தமிசைமேன் மேலும் துக்கமேமேவி

அத்தருணம் ஜானகிதன் ஜடையைக்கழுத்தில்
　　அழுத்தி சுருக்கிட்டு தன்னுயிர்போக்க முயல

சித்த ஜன்பிதனை ஸ்ரீ ராமன் மனைவி
　　சீதாபிராட்டி யிவளேயென்று தேர்ந்து

புத்தியிலுணர்ந்தந்தக்ஷண மாஞ்சனேயன்
　　பூங்கோதை மகிழக்ஷேமம் ராமனென்றும்

கைத்தலத்தில் ராமன் கணையாழி யீந்தும்
　　கபிவரன் ஜானகிக்கனுமானம் நீங்க

காகுஸ்தன் ரகசியத்தில் சொன்னயாவும்
　　கழரவே ஜானகியுள் கலக்கம் தெளிந்தும்

ஹநுமானைப் பற்பலவிதமாய்ப் புகழ்ந்தென்
　　ஆவியை ரக்ஷித்த அமிர்தஸஞ்ஜீவா

கனவானெ நீ சிரஞ்சீவியா வென்றும்
　　காகுஸ்தன் தூதனெனும் நற்கீர்த்தி வாய்ந்தும்

அநுமான மனுவுமில்லாமல் வாழ்வாயென்று
ஆசீர்வசனம் சீதை அன்பாய்ப்புகன்றும்
தன்னுடைய அடையாளமாய்ச் சூடாமணியை
தக்ஷணம் ஆஞ்சனேயன் கையிலீந்தெதன்
மன்னவன் ஸ்ரீராமனுக்கெந்தன் நிலைமை
மாருதியே நீ சென்று புகலுவாயென்று
அன்னை சீதாதேவி அநுமானுக்காசி
அன்புகூர்ந்தறைந்தனுப்பவே ஆஞ்சனேயன்
தானங்கு எய்தியதும் ராமன் புஜபலமும்
தசமுகன் தானுணர வென்றெண்ணியே தான்
ஆற்றலுடனேயசோகவனம் யாவும்
அழித்து நிர்த்தூளியாய்ப் பாழாக்கி ஹநுமான்
ஏற்றதோர் தோரணக் கம்பத்தின் மீதில்
ஏறியுட்கார்ந்தெண்டிசையும் நோக்குவதை
அரக்கர்கள் சூழ்ந்தமர் செய்யவே ஹநுமான்
அனைவரையும் கொன்று தானிருமாந்திருந்தும்
அக்ஷய குமாரனாதியர்களை மாய்த்தும்
அரக்கேந்திரனைக் காணவென்னும் தன்னுள்ளின்
லக்ஷியமாயிந்த்ரஜித்தின் கையில் சிக்க
லகுவாயிந்த்ரஜித்து அனுமனை பிணித்து
அக்ஷணம் கொண்டேகி அனுமனைத் தன்னுடைய
ஐயன்முன் சேர்ப்பித்து தன்வலிமைசாற்ற
மூன்று லோகாதிபதியெனும் மாக்ஷிவாய்ந்து
மூர்த்தன்யமாய் விளங்கும் இலங்கேசன்
ஆன்றோர்களைக்கண்டும் அன்புலாக்கறையா
அதிமதோன்மத்தனாயிருக்கு மசுரேசன்
அநுமானைப் பார்த்தவலமா யெண்ணியே நீ
ஆரடா குரங்கேயென்றெள்ளியேகேட்க
மனதிலதிமுனிவெய்தியே யாஞ்சனேயன்
மறுவார்த்தை சொலுமுன் தன்வாலை வளர்த்தி
ராவணன் மேல் நோக்கி பார்க்கும் விதமாக
ராமதூதன் சிங்காதனமாக்கியதன் மேல்

மூவுலகும் புகழும் மாருதி தானமர்ந்து
முழுமூடனே சற்று கேளடாவென்று

பாவகனும் கண்டஞ்சும் ராமன் பத்தினியை
பக்குவமாய்க்கவர்ந் தெடுத்திக்குற்ற திருடா

நானுனக்கன் பாசச்சொல் வார்த்தையிதடா
நலமற்று துயரெய்தும் துன்மார்க்க மூடா

பானுகுலஸ்ரேஷ்ட ஸ்ரீராமன் பத்தினியை
பவ்யமாய் வேண்டியவள்கணவனிடம் சேர்த்தால்

மானிலத்தோரும் விண்ணோர்களும் புகழும்
மாசுஇமை பெற்றயிவ்விலங்கை மாநகரை

பானுஸஹிவரையும் நற்கீர்த்தி வாய்ந்தோங்கி
பண்பாக அரசாண்டு சுகமாக வாழ்வாய்

நான் சொல்லும் வாக்கை மறுத்தாயேயானல்
நமனுலகு நீயெய்தி நரகடைவாயென்றும்

ஸ்ரீராமன் சேவகன் நானடாவென்றும்
சிறந்த என் பெயரநுமான் பாரடாவென்றும்

வீராதி வீரனிவ்விதம் தூதுசாற்ற
விழிகளிருபதுகளிலும் வன்னிபொறியுதிர

சூராதி சூராரவணன் சீற்றம் மூண்டு
சுற்றிலும் சூழ்ந்துள்ள அசுரர் நடுங்க

ஆராத கோபத்தாலண்டங்களதிர
அரக்கேசன் கர்ஜித்து தட்டைக்கடித்து

புடைசூழ்ந்து நிற்கின்ற மந்த்ரிகளைப்பார்த்து
புன்செயலிழைத்த யிவ்வானரனைவேகம்

கண்டதுண்டமாய் வெட்டிக்கொல்லுங்களெனுமக்
கணத்தில் விபீஷணன் பணிந்தேற்றும் வாக்கால்

முனிவுசற்றுக் குறைந்தேயிலங்கேசன்
மும்மரமாய் வந்தயிக்குரங்கின் பெருவாலில்

நெருப்பிட்டு யிந்நகரை விட்டோட்டுமெனவே
நிஷ்கண்டகர் ஹநுமன் வாலில் துணிசுற்றி

எண்ணெயில் தோய்த்து நுனிவாலில் தீமூட்ட
எது வேண்டுமோ அதனை அவர்களே தந்தார்

என்றுன் மகிழ்ந்தாஞ்சனேயனோங்கிடவும்
ஏற்ற சமயத்தில நுமானுக்கவ்வக்னி

எம்பெருமான் ஸ்ரீராமன் மனைவியருளாலும்
எதேச்சையாய் பண்டக்னியருள் வரத்தாலும்

தீரானநுமானுக்குச் சிறிதும் சூடின்றி
திவ்யமாகிய கங்காநதிஜலம்போலும்

பன்னீர் கலந்த சந்தணம்போல் குளிர்ந்து
பவனஸூனனுமானுக் கச்சமயத்துநவே

எங்கெங்கும் தாண்டிக்குதித்திலங்கை நகரை
எழில்மிகும் ஜானகியிருக்குமிடந்தவிர

அங்கிக்கிரையாக்கி பஸுமமாய்ச்செய்து
அநுமனதிவேகமிக்கரை சேர்ந்து திடமாய்

பவனஸூன்வரவை எதிர்பார்க்கும் ராமன்பால்
பவ்யமாய்ச்சென்று கண்டேன் மைதிலியை நான்

என்றுதான் சாவதானமதாகசேதி ............
யாவற்றையும் சாற்றி எழில் சூடாமணியை

சென்றுதான் வந்ததற்கடையாளமாக
ஜெயசாலி ஸ்ரீராமன் கையில்தான் தரவே

அன்றலர்ந்திட்ட செந்தாமரை நிகர்த்த
அழகுமுகனாகி பேராற்றல் மலிந்து

கன்றுக்குவக்கும் கபிலைபோல் ஸ்ரீராமன்
கபிவரனைத்தான் புகழ்ந்துளமகிழ்ந்தானும்

சூடாமணிக் கைகிடைத்தவுடன் ராமன்
சுறுசுறுப்பாயுள் தெளிந்தாற்றல்மேவி

கோடானகோடி யசுரப்படைகள் மிகவுள்ள
கொடிய தசகண்டனை வதைத்து ஜானகியை

நாடோறும் அடியர்கள் தொழுதேற்றிப்போற்ற
நான் சிறைமீட்டு கைக்கொண்டு மூவுலகும்

ஈடேறுமார்க்கமிக்கணம் செய்வேனென்று
இரவிகுலதிலக ஸ்ரீராமன் தானெண்ணி

தோழமைகொண்ட சுக்ரீவராஜனையும்
தொண்மையுணர் ஜாம்புவானாதியர்களையும்

எழுகடல் சூழ்புவியோரிமையோரும் போற்றும்
எழில்மிகும் ஸ்ரீராமனழைத்து சபை சேர்த்து
ஆழியைக்கடந்திலங்கைநகர் சேர
ஆகவேண்டிய விஷயம் யோசித்திருக்க
இலங்கைமாநகரில் தசக்ரீவனுக்கவன்
இளவல்விபீஷணன் பணிந்து தாட்போற்றி
நலங்கருதியே யண்ணனுக்கு பல நீதி
நவின்று ஸ்ரீ ஜானகியை ராமனிடம் சேர்த்தால்
பலன்கள் தாமெய்தியிப்பட்டணம் ஆண்டு
பாந்தவர்களாதி புத்திரர் மித்திரரையுள்
கலங்காமல் காப்பாற்றிச் சுகமாகவாழ்வீர்
கருணைகூர்ந்தென் வாக்கை கைகொள்ளுமெனவே
அடங்காத சீற்றம் மிகுந்திலங்கேசன்
அன்பன் விபீஷணனை சத்ருவாயெண்ணி
படங்காட்டுமரவுபோல் சீறிபெருமூச்சால்
படுபாவி என்னடா சொன்னாயென்றேசி
கடந்தேகடாயிவ்விலங்கையை விட்டு
கடையனே நீயெனக்கோபுத்தி சொன்னாய்
முடிந்ததோ உந்தனிட ஆயுளென்றுடனே
மூர்க்கன் தன்கைவாளால் வெட்டமுன்னோர
அச்சமயத்தில் விபீஷணனகன்றோடி
அமைச்சராயும் தனக்கதிநேசராயும்
இச்சகம்புகலாத சத்பாத்ரராயும்
இருக்கும் நால்வர்களுடனிலங்கையை விட்டு
நிச்சயமனத்தோன் கைகதைமாத்ரம் கொண்டு
நீலநிறத் தாகாயமார்க்கமாய் வேகம்
பச்சைமேனித்திகழும் ராமனிடம் சேர்ந்து
பரமாத்மநன்பாவிவ்வடியன் சரண்புக்கேன்
நச்சரவணைசயன நாரணா அபயம்
நலங்களடியார்க்கருளும் பூரணா அபயம்
வஜ்ரதாரணதியமரர் பணியும் பாதா
வைகுந்தனுதலக்ஷ்மீசனே அபயம்

இச்செகம் காக்க சாகேதையிலுதித்த
இரவிகுல ஸ்ரீராமசந்த்ரனே அபயம்
சச்சிதானந்த பரப்ரம்மஸ்வரூபா
சர்வலோகேச சீதாபதே அபயம்
அபயம் அபயமிந்த அடியேன்பால் க்ருபைகூர்ந்து
ஆட்கொள்ளுவா யென்றடைக்கலம் புக்கும்
அடியேனிப்பாவித சக்ரீவனுக்கிளையோன்
அவனால் விரட்ட நானிங்குற்றேனென்றும்
ஆதிமுதலண்ணனுக்கும் தனக்கும் உள்ள
அந்யோந்யமற்ற சங்கதியாவும் சாற்றி
அக்ஷிகளில் நீர் சோரஹஸ்ங்கள் கூப்பி
அடங்கி நிற்கும் விபீஷணனை ஸ்ரீராமன்
பக்ஷமாய்த் திருக்கண் கடாக்ஷித்து அபயம்
பாங்காக பாலித்துயிலங்கை நகராக்ஷி
நிச்சயம் தந்தேனுனக் கென்றுறுதியாய்
நிகழ்த்தியே தன்னுடன் பிரந்தபாந்தவன்போல்
அச்சமயம் பாவித்து அவனையாட்கொண்டவுடன்
அனைவற்று வானரரும்புகழந் தார்ப்பரிக்க
ஆழியைக் கடந்தேக அணைகட்டவென்று
அனைவரும் ஏகமனதாய் நிச்சயித்து
ஆழியரசனை ராமன் வேண்டிப்ப்ரார்த்தித்தும்
அவன் மதங்கொண்டு செவியேற்காமலுறபா
லாழிசயனன் ஆனபாநுகுல திலகன்
ப்ரம்மாஸ்திரத்தைப்ரயோகம் செய்திடவே
ஆழிஜலமெல்லாம் கொதித்தாவியாக
அம்பரம்மேவ ஜலஜெந்துக்களெல்லாம்
ஊழிகாலத்தீயில் வெந்து வெண்ணீறாகும்
உவமைபோல் தத்தளித்துயிரற்று மாளும்
காலம்யேதோவென்று கனக நகரோரும்
கருத்தில் வியப்புற்று அந்தோவென்றலறும்
வேளையில் வருணன் திடுக்கிட்டுள்ளேங்கி
வேகம் ஸ்ரீராமன்பால் சென்றபயம் வேண்ட

மூளை கெட்டவனே யென்றவனையாட் கொண்டு தான்
மூர்த்தன் யமாயெய்த கணையைபின்வாங்க
சாகரத்தரசன் கைகுவித்தெதந்தன்மீது
சதிராக அணைகட்டிக் கொள்ளுமெனவேண்டி
காகுத்தன்பால் விடைபெற்றேகியப்பின்
கபிவரரால் சமுத்திரத்தில் சேதுகட்டி
வானரச்சேனை யெழுபது வெள்ளத்துடனே
வானராதிபசுக்ரீவன் போற்றிநீல
மேனியனே யாவும் தயாராயிற்றெறந்தன்
மீது தயைகூர்ந்தெழுந் தருளுமென்றேற்ற
பாஹு வில் கோதண்டமேந்தி ஸ்ரீராமன்
பார்த்தவன் பின்தொடர அதியாற்றலுடனே
சாஹஸத்துயர் கபிவரர்கள் சமைத்தபெரு
சாற்றொணு சேதுவைக் கண்டுள்மகிழ்ந்து
வானரச் சேனாதிபதிகள் புடைசூழ
வாயுஸூன் கைகட்டி வாய்பொத்தி வரவும்
கோனனை சுக்ரீவன் யாவும் சரிபார்த்து
கோதண்டதாரனுக்குரை யெதிர்நோக்கி வரவும்
எல்லோரும் சேர்ந்தணைக்கட்டின் மீதேகி
எழிலாய் விளங்குமிலங்கைநகர் கண்டு
வல்லாளனான ராவணனை வதைக்க
வாய்ந்த சுவேலாவெற்பில் தாம்தண்டிறங்கி
அங்கதனைத்தூதாய் விடுத்து அசுரேசனிட
ஆணவமுமவனுள் கருத்தும் தெரிந்து
சங்கதிவேறிலையென்று ஸமர்சூக்ஷிசெய்து
சாக்ஷாத் ஸ்ரீராமச்சந்திரனுக்குநையைப் போல்
எங்கிருக்கின்றான் ராவணனெனும் கோடியோன்
என்று கபிவீரர்களாரவாரமதாய்
தங்கள் புஜபல பராக்கிரமங்களைக்காட்டி
தகுந்த சமயம் இங்குவாய்ந்ததென சாற்றிராகு
புங்கவ ஸ்ரீராமனுடைய திருவடியை மனப்
பூர்வமாய்த் தொழுதேற்றி யாற்றல் மிகமேவி

தங்கள் தங்கள் வீரமதைக்காட்டி சமருக்குத்
தயாராய் வானரசேனை சூழ்ந்தார்ப்பரிக்க

இங்குள்ள வயணங்களுணர்ந்திலங்கேசன்
இணையற்ற லங்கை வடவாசற்கோபுரமேல்

தங்கசிங்காதனம் யிட்டதில்தான் வீற்று
தாசரதியின் படையைப் பார்த்திருக்குங்கால்

அங்கிபோல் கண்கள் சிவந்தாற்றல் மிகவோங்கி
ஆறுதசீற்ற மிகமூண்டு சுக்ரீவன்

தங்கமயமாய்த் திகழும் தசக்ரீவன்மீது
தானம்பரந்தாவிபாய்ந்துப் புடைத்து

திங்கள் கதிரொளியை திக்கரிக்குமவன் மகுடத்தைத்
தீவிரமதாய்ப் பரித்ததனை கைகொண்டு

சங்கையுள் சற்றேனுமின்றி ராகவன் பால்
சரண்சாற்றி தன்விஷயம் வழுவாமலேற்றி

தங்கநகர் லங்கேசனுடைய திருமுடியை
தாமராக்ஷ ஸ்ரீராமனங்க்ரிக்கு

புஷ்பமாயர்ச்சித்து கைகட்டி நிற்கும்
புஜபலமிகும் சுக்ரீவனுக்கு ஸ்ரீராமன்

நிஷ்பக்ஷபாதமாய் நிதி சிலசாற்றி
நிகரற்ற தானசமர் முரசறையவித்து

இலங்கை நாற்புறமும் வானரசைன்யங்கள் சூழ்ந்து
இசைந்த அரண்வாசல்கள் முற்றுகைபோட்ட

மகுடத்தைப் பறிகொடுத்திலங்காதிபன் தன்
மனதிலதிகோபமும் வெட்கமுமடைந்து

தகமைசேர் தன்னரண்மனைக்கேகியுடனே
தக்ஷணம் பெரியதோரசுரசைன்யத்தை

பகைவரைப் போரிழைத்தனைவரையும் மாய்த்து
பதிலெனக்கதிவேகம் சொலவென்று ஏவ

தசக்ரீவனுக்கிணைபோ லசுரசைன்யங்கள்
தாங்களதிதீரமாய் சூழ்ந்துபோர் புரிய

மசகமா யசுரரையெண்ணி ஸ்ரீராமன்
மாக்ஷிமிகும் கணையேவி அனைவரையும் மாய்த்த

விதம் சாரணர்களாலறிந்த தசகண்டன்
　　விரைவாக கும்பகர்ணனையழைப்பித்து
எதிரிகளின் விஷயங்களொழிக்காமல் யாவும்
　　என்னநுஜஸ்ரேஷ்டனே கேளென்று சாற்றி
அதிவேகம் ராக்ஷஸப் படைகளுடனே
　　அமர்களம் சென்றங்கு உள்ள கபிகளையும்
மதியின்றி வந்தயிரு மானிடர்களையும்
　　மாபாவியாம் விபீஷணையும் வேகம்
எதிர்வாக்கெனக்கொன்றும் சொல்லாமலேகி
　　ஏற்றபடி மாய்த்துவாவென கும்பகர்ணன்
அதிபவ்யமாக ராவணனைப்பணிந்து
　　அன்பாக பலநீதி தானெடுத்தோதி
பரமனுறும் மலையை பேர்த்தெடுத்த அண்ணாகேள்
　　பலநூல்களும் சொலும் பான்மைப் புகல்வேன்
தாரணியில் பரதாரகமன கொடியச்செய்கை
　　தன் புத்ரமித்ரகளத்ராதிவேருடனே
ஒருநொடியில் நாசமாய்ச் செய்துவிடுமென்பதை
　　உனக்கன்புடன் சொல்லுமென் வார்த்தையேற்று
அரிவையர்க்கணியாய் விளங்கும் ஜானகியை
　　அவள் கணவன் ராமன்பால் சேர்த்து சரண்புக்கால்
தரைவானும் கலைபாரும் உளவரையும் சுகமாய்
　　தமனீயமயலங்கை அரசாண்டு வாழ்வாய்
ஒருகுரங்காலிந்த லங்கை பட்டப்பாடு
　　ஓதவும் வேண்டுமோவென தசக்ரீவன்
இருபத்து கண்களும் சிவந்த திகழொளிவெய்தி
　　இதற்காகவோ உன்னை இங்கழைப்பித்தேன்
மறுவாக்கு கூறாமல் சமர்க்கேகடா அற்ப
　　மானிடர்க் கஞ்சினையென கும்பகர்ணன்
தன்னுயிரின்றுடன் தீர்ந்ததென்றுள் தேர்ந்தும்
　　தசமுகனுக்கழிவு காலமும் நேர்ந்ததென்றும்
என்னாலிங்காகுவது ஒன்றுமில்லையென்றும்
　　எல்லாம் ஸ்ரீ ஜெகதீசன் சங்கற்பமென்றும்

முன்னாக தசக்ரீவனுக்கு சில வார்த்தை
மூர்த்தன்யமாய்ப்புகல முன்னேறியே தான்
தன்னோடு பிறந்தவனெனும் சகோதரப்பற்றும்
தானற வொழித்துக்ரமொழி சிலதறைந்தான்
உன் தம்பியாகப் பிறந்தநான் சமர்க்கேகி
உயிரிழப்பது திண்ணமினியிங்கு எய்தேன்
என் தம்பியாம் விபீஷணன் ராமனருள்பெற்று
எழில்மிகும் இவ்விலங்கை நகரையாண்டும்
தன் திருக்கைகளால் எங்கட்கெல்லோர்க்கும்
தகனகடனாதி தில தற்பணாதிகளும்
சந்ததம் செய்தோங்கி நீடூழி வாழ்வான்
சமருக்கிதோ செல்கிறேனென்றகன்று
கும்பகர்ணன் மனக்கேகிபோர்க்கோலம்
கொண்டமர்களம் நாடிவரவெ ஸ்ரீராமன்
தம்பியை யெச்சரித்துடன் விபீஷணனை
தான்பார்த்து வினவினான் சிலவார்த்தைகளினால்
பெருநீலமலைக்கு கால்கைகளுண்டாகி
பேருலகெலாமதிர போர்க்கோலத்துடனே
கரியமாகிரியை நிகர்த்துவருபவன் யார்
கழருவாயெனவே விபீஷணன் பணிந்து
தரைமிசை சத்ய தருத்தை நிலைநாட்ட
தசரதன் சுதனாயுதித்த ஜெகதீசா
கரியகுழல் ஜானகியை கவர்ந்துசிறை வைத்துள்ள
கண்டக தசக்ரீவனுக்கு இவனிளையோன்
பிரியமனமின்றியுன்பால் சரண்புக்கயிப்
பேதையடியேனுக்கு நேர் தமையனென்றும்
இருகைகளைக்கூப்பி இவன் நாமதேயம்
இணையற்ற ரணசூர கடகர்ணனெனவே
பரிவுடன் ஸ்ரீராமனுன் தமையனெண்ணத்தை
பாங்காயறிந்துவாவென விபீஷணனும்
கும்பகர்ணனைத்தானெதிர்கொண்டு சென்றுகா
குத்தன் சொல்விஷயத்தைப்புகல முன்வரவே

அம்புகண்களில் பெருக கும்பகர்ணன் தன்
    அநுஜன் விபீஷணனைக் கண்டன்புபூண்டு
அம்புவியெலாம் புகழ ஸ்ரீராமனருள்பெற்று
    ஆசந்திரார்க்கமாய் லங்கையரசாண்டு
நம்பியுள எங்களுக்கென்னீரிரைக்க
    நல்லவனாய் நீயொருவனுண்டென்றிருந்தேன்
தம்பிவிபீஷணா தாசரதியைவிட்டு
    தற்சமயமேன்வந்தா யென்றயர்ந்தழைய
எம்பிரான் ஸ்ரீராமன் உன்னெண்ணமதனை
    ஏற்றபடியுணராளனை ஏவினனென்று
தண்டாக்கிருதியதாக தமையன் தாட்களில் வீழ்ந்து
    தான்கேட்க கடகர்ணன் சொற்றான் நிச்சயமாய்
கண்டாலும் கேட்டாலும் கனவில் பார்த்தாலும்
    காகுஸ்தனே உண்மைத்தெய்வமென் தம்பி
திண்டோளனென் தமையன் தந்த ஊண்கடன்தீர்க்க
    தீவிரமதாயிங்கு சேர்ந்து ராகவன்கை
தூண்டான திவ்யாஸ்திரத்தாலென்னுயிர் போக்கி
    உயர்சொர்க்க பதமெய்தவந்த என் சேதி
அண்டாண்டமும் போற்றும் ஸ்ரீராமனுக்கு
    அறைந்து நீ வாழ்ந்தோங்குவாயென்றனுப்பி
கும்பகர்ணன் அட்டஹாஸம் செய்தோங்கி
    கோதண்டபாணி பால்கொடு சமரிழைத்தும்
சம்பராரியின் வஜ்ரபடைகொண்டு படுசூர்ண
    சாம்பலாகும் வண்ணம் வானரரை மாய்த்தும்
உம்பர்களாதியரும் கண்டயரும்விதமாக
    ஊர்ஜிதமதாய் கும்பகர்ணன் செய்சமரால்
வெம்பவம் மிகவெய்தி வானராதியரெலாம்
    வேகம் ஸ்ரீராமனை சூழ்ந்தபயம் வேண்ட
அம்புஜாக்ஷன் ராமன் கடகர்ணன் கைகால்கள்
    அற்றுவிழ ஓரம்பால் செய்யவசுரேசன்
அம்புவியம்மியுமாய்த் தன்னுடல் குளவியாயும்
    அரைத்தரைத்துச் சட்ணியாக்க ஸ்ரீராமன்

தம்பியும் கண்டுள்களிக்கும்வாறாய் வேகம்
தன்கை கோதண்டத்தை வளைத்து ஞாணேற்றி
சம்பிரதாயப்ரகாரமோர் தீக்ஷண்ய
சரத்தை விடுத்து கடகர்ணனை மாய்க்க
உம்பர்களும் கண்டுமகிழ்வெய்தி மென்மேலும்
உயர்புஷ்பமாரிபெய்தோங்கும் சங்கதியை
நம்பிக்கையுளதூதர் சொலக் கேட்டிலங்கேசன்
நயனமிருபதிலும் நீர் அருவியாய்ப்பெருக
என்பக்கமொரு சகோதரனுமில்லாமல் நான்
ஏங்கியுழலும் கொடிய காலம் நேர்ந்ததுவே
தம்பியுள்ளவன் படைக்கஞ்சானெனும் வாக்கென்
தலையிலிடிவிழுந்தாற்போல் தவித்திடலாயிற்றே
அம்புஜோத்பவனென்னும் படுபாவி ப்ரம்மனெனக்
கற்பாயுழைத்தந்ததேதோ நானறியேன்
தம்பியின் மரணத்தைக் கேட்டிந்தவிதமாக
தசக்ரீவனழுதுப் புலம்புதல் கேட்டு
தக்ஷணம் வோடோடிவந்திந்த்ரஜித்து தன்
தந்தையைத்தேற்றி தன்னுற்றலைச் சாற்றி
இக்ஷணம் நான்சென்று அற்பமனிதரையு மவர்க்
கிசைந்த வானரங்களையும் மாயத்து நமனுக்கு
பக்ஷணம் செய்வித்து வருகிறேனென்றையன்
பாதம் பணிந்துடன் போர்க்கோலம் கொண்டு
லக்ஷலக்ஷம் கோடியசுர படைகள்சூழ
லங்கையுவராஜாவெனும் யிந்த்ரஜித்து
தந்தையின் துயரத்தை போக்கவென்ற மர்களம்
தானெய்தி சமர்சூக்ஷி செய்தார்பரித்து
அம்புவியுளோரும் விண்ணோர்களும் அயர
அதிகோரமாய் ராமனுடன் போர்புரிந்தும்
அம்பரத்தில் மறைந்தும் பூமியில் நின்றும்
அதிசீற்றமாக பற்பல யுத்தம் செய்தும்
எம்பிரான் ஸ்ரீராமன் பாணங்களா லசுரன்
என்றுமில்லாத சோர்வுற்றுள்ளயர்ந்தும்

நாகாஸ்த்ர மெய்து மூர்க்கன் இந்த்ராஜித்து ரகு
நாதனையுமநுஜனையும் பிணித்துயிரைவாட்ட

ஆஹாகாரம் செய்து அமரர்கண்ணீர்விட்டு
ஐயனே ரகுராமா என்செய்வோமெனவே

ஆகாயமார்க்கமாய் வைனதேயன் வந்து
அரவாஸ்திரத்தை படுசூர்ணமாயாக்க

அம்புஜோத்பவனஸ்த்ரம் ஆற்றலோடெய்தும்
ஆஞ்சலேயன் செயலாலதுவும் வீணாகி

மேதினியோர் புகழும் ஸ்ரீராமனம்புகளால்
மேலான தன் படைகள் யாவும் பாழாக

பாதகன் ஆனயீந்த்ராஜித்து தன்னுள்
பற்பலவிதமதாக யோசித்துக்கொடியன்

சாதகம் நானெவ்வாறடையலாமென்று
சமர்களம்விட்டு மாயாவிமனைசேர்ந்து

ஏதேதோ யோசித்து ஏகாந்தமாய்த் தான்
எளிதிலிம்மானிடரை நான்மாய்ப்பதற்கு

ஆதிமுதல் யுத்த நூல் முழுதுமாராய்ந்து
அரியதாகிய நிகும்பலையாகம் செய்தால்

வாதின்றி மானிடர்களிருவரையும் மாய்த்தும்
மர்க்கடங்களையெல்லாம் பசமம் செய்திடலாம்

என்றுள்ளில் தீர்மானம் செய்திந்த்ராஜித்தன்
ஏற்றதாயின்னுமொரு யுக்தியும்செய்து

நிகும்பலையிஷ்டி நான் செய்கின்ற விஷயம்
நீர்மையாய் நம் சத்துருக்கள் அறிந்தால்

வெகுசீக்ரம் வந்தெந்தன் மகத்தைக்கெடுத்து
வெற்றி நான் பெறவொண்ணாவிதம் நாசம் செய்வார்

இதர்க்காகவே தானோர் யுக்தியும்செய்து
இணையற்ற மாயாவிசேஷத்தினாலோர்

மாயாவி சீதைபோல் மாயமாதாக்கியவன்
மலர்சூட்டும் கரியகுழலைத் தன்கைபற்றி

ஓயாமல் மாயமாதலறி ராமா ராமா
உனக்கபயம் உனக்கபயம் உனக்கபயமென்று

வாயால் புகன்றழும் வாருக தானுக்கி
    வாயுஸூன் முன்கொண்டு வந்தவளை வெட்டி
மாயமாய் வானில் மறைந்தேகியே பாவி
    மகத்தை நூல்முறைபோல மர்மமாய்ச் செய்ய
மாயஜானகியை யிந்திரஜித்தன் வாளால்
    மனமிரக்கம் யின்றி இருதுண்டமாக்க
வாயுஸூன் கண்டுடல்பதறி அந்தோ அந்தோ
    வைதேஹி வைதேஹி மாண்டாயோவென்று
மாயமுணராமல் தான் மண்மீதுருண்டுடன்
    மாதாவெ சீதாபிராட்டியே யென்றும்
காயாம்பூவண்ணனிட காதலியே யென்றும்
    கண்களில் நீர்பெருக வாய்விட்டு அலறும்
ஆஞ்சனேயனை விபீஷணன் கண்டுதேற்றி
    அசுரரின் மாய்கையென்றையமற சாற்றி
மாபாவியிந்த்ரஜித்திம்மாய்கை செய்து
    மாருதியே உம்முளமிவ்வாறாய்க் கலங்கத்
தான் செய்துவிட்டேஇயே நிகும்பிலையாகம்
    தவறாமல் செய்கின்றானிச்சமயமென்றும்
அவன்செய்யும் யாகம் நிறைவேறிற்றானால்
    அவனையாராலும் ஜெயிக்கவொண்ணாது
ஆகையால் நீரிந்தக்ஷணமங்கு எய்தி
    அசுரனவன் செய்யும் மகத்தைக் கெடுத்து
பாகமாய் அவனைவிடாமல் கையில்பற்றி
    பாபியை யிலக்குவன் முன்சேர்க்க வேண்டும்
வேகமாய்ப் போய்வாருமென்றவன் செய்யும்
    வேள்வித்தலத்தையும் விண்டவுடனநுமான்
ஆகாயமார்க்கமாய்ச் சென்றிந்த்ரஜித்தன்
    ஆகமம்போல் செய்யுமிஷ்டியை யழித்து
சோகாந்தகாரத்திலிந்த்ரஜித் தாழவுள்
    சோர்வின்றி மாருதியவன் சிகைபற்றி
தேகாதி நலிய பலவிதமாய்ப் புடைத்து
    தேவேந்த்ரன் ரிபுவை லக்ஷ்மணன் முன்பில்சேர்க்க

நாகாம்சமான லெக்ஷ்மணன் யிந்த்ராஜித்தை
நவிலொண்ணு தீக்ஷண்யகணையெய்துமாய்க்க
ஆகாயமார்க்கத்திலமரர்கள் சூழ்ந்து
ஆனந்தமெய்தி லக்ஷ்மணனைப் புகழ்ந்து
ஆகவேண்டிய கார்யம் முடிவுறுங்காலம்
அடுத்ததென்றூர்பரித்தலர் புஷ்பமாரி
அழகாக சௌமித்ரி மீது வருஷித்து
அவரவர் தம் மெதாஸ்தானங்களெய்த
இந்த விதமாய் மிக்க சூரனிந்திரஜித்து
இலக்குவன் கைம்புக்கிரையாகி மாண்ட
விந்தையைக்கேட்டு ராவணன் திடுக்கிட்டு
வீரிட்டு வாய்விட்டு அலரியழுதானும். (எலேலோ)

(8) இந்தவிதமாக லெக்ஷ்மணனுமை பகழியால்
இகலோக வாழ்வற்று யெமலோக மேவி
அந்தகன் கைலகப்பட்டவிந்திரஜித்தின்
ஆற்றல்களொவ்வொன்றும் சாற்றி தசக்ரீவன்
அருமைமகனேயிந்த்ராஜித்தே நீ உலகில்
அற்பமனிதன் கையால் மாண்டபிறகிந்த
பெருமைசேரிவ் விலங்கை நகரையாண்டு
பேருலகில் நானிருந்தென்ன பயனென்று
அக்ஷிகள் யிருபதிலும் அருவிபோல் நீர்சொரிய
அய்யய்யோமகனே யென்றலருமச்சமயம்
குச்சிதர்களாயுமிகு மிச்சகம் புகலும்
குடிலராயுள்ள சில அசுரமந்திரிகள்
அச்சமயம் லங்கேசனையவர்கள் தேற்றி
ஆயுழற்றுயிரற்றவர்க்காக தாங்கள்
இச்சமயமிவ்வாறு துயருறுதல் தகுமோ
இமையோர் நகைப்பாரே எங்களாண்டவனே
அச்சமினி தங்களுள்ளில் கொள்ளவேண்டாம்
அதற்கேற்ற வகையை யிங்கடியேங்களறைவோம்
நச்சரவ பூஷணனும் கண்டுள்திகில் கொள்ளும்
நவிலொணு தம்மூல பலசைனியத்தை

இக்கணம் தாமாக்ஞை செய்தேவிவிட்டால்
இழிவான கபிகளுடனிருசிறுமானிடரும்
அக்கினியில் வீழ்ந்த விட்டில் பூச்சிகள்போல
அரைக்கணத்தில் மாண்டு அழிந்தொழிவரென்று
தற்சமயமசுர மந்திரிகள் சொல்வாக்கால்
தசமுகவனும் தேர்ந்து இடியொலி நிகர்த்த
கர்ஜனை செய்துடன் மூலபலமதனை
கண்ணிருபதோனாக்ஞை செய்தேகச்செயவே
மூலபல படைவீரர் மூர்த்தன்யமாக
மூன்று லோகத்தோரும் கண்டஞ்சும்வாறாய்
ஒருமுகமுமிருமுகமும் பலமுகங்களுமாய்
ஓங்கி யானைசிங்கம் புலிகரடி முகமாய்
தரைமிசை பல்வேறு முகங்களாயுள்ளோர்
தனுர்ப்பாணமாதிபல படைக்கலங்கள்கொண்டு
கருமலைக்கிணையானோர் கணக்கிலடங்காதோர்
கண்ணிலங்கிப் பொரிகள் உதிர்க்குரரானோர்
அதிவேகமாயுத்த பூமியைநாட
அப்பெரிய சேனையைக்கண்டு வானரர்கள்
மதிமருண்டுடல்பதரி யதிபீதி மூண்டு
மன்னனாகிய ராமசந்த்ரனையணுகி
இதுவரை ராக்கதரைக் கண்டஞ்சினோமில்லை
இப்பெரிய சேனையைக் கண்டின்றிகில் கொண்டோம்
பதுமாக்ஷனே யுன்பாலடைக்கலம் புக்கோம்
பாதுகாப்பாயென்று அனைவரும் வேண்ட
ஒப்புயர் தனக்கிணைப் பதினான்கு லோகத்தும்
ஒருவரும் யில்லாமலோங்கும் ரகுவீரன்
இப்படைக்காக சற்றேனும் நீங்கள் மனம்
இடிந்து அஞ்சாதீர்கவென்ற பயமீந்து
அப்பொழுதே ஸ்ரீராமன் தன் வில் வளைத்து
ஆற்றல்மிக ஞாணேற்றிஷ்டங்காரம் செய்து
செப்பமாயொரு மோஹனாஸ்திரமெடுத்து
ஜெகதேக வீரன்ப்ரயோகம் செய்திடவே

அப்பெரிய மூலபல படைவீரர் தம்முன்
அவரவர் கண்களுக்கவர் ராமனாக
இப்புவியுளோரும் விண்ணோரும் வியப்ப
இணையற்ற மூலபலத்தோர்கள் தாம்தாமே
கைப்பிடித்துள்ளவாள் கதை சூலங்களினால்
கடுமூர்க்கர் தம்முள் போர் தாமே புரிந்து
ஒருமுகூர்த்தமதாக சொலும் நேரத்திற்குள்
ஒப்பற்ற மூலபலம் ஒழிந்ததைக்கேட்டு
எப்படியேனும் எந்தன் சத்ருக்களை நான்
ஏற்றவிதமாய்க்கொன்று ஜெயம்பெறுவேனென்று
மைப்பாவுமெய்யோன் மகோதரன் என்னும் தன்
மந்த்ரியை சமருக்கனுப்ப ஸ்ரீராமன்
ராக்கதச் சேனைசூழ்க் தார்ப்பாட்டமாய் வந்த
ராக்கதனை சேனையுடனேயமர்களத்தில்
தாக்கி ராகவன் மகோதரனையும் மாய்க்க
தசமுகன் தக்ஷணம் போர்க்கோலம் கொண்டு
எசவாயமர்களம் சேர்ந்து மிக முனிவாய்
இருபத்துக்கைகளிலுமாயுதங்களேந்தி
குசுமாக்ஷ ஸ்ரீராமன் முன்புற்றிலங்கேசன்
குறிதவறாவிதமனந்தக்கணைகள் எய்து
பசுமமாய் வானரங்களை மாய்த்து மென்மேலும்
பாஹுபலமோங்க கடும்போர் புரிந்தானும். (ஏலேலோ)

(9) இவ்விதமதாய்த்தசக்ரீவன் ராமன் படையை
இருந்தவிடம் தெரியாமல் சமர்செய்தழிக்க
அவ்வமயம் வானரச் சேனாதி பதிகளும்
அயராமல் விருக்ஷங்கள் மலைகுன்றுகளையும்
ஆற்றலுடன் பேர்த்தெடுத்தசுரர்களைச்சாடி
ஹதமாக்கி நிர்த்தூளி செய்திடவும் ஹநுமான்
அரக்கேசன் தேர்மீதிருக்க ஸ்ரீராமன்
அம்புவியில் நின்று தான் அமர்செய்தல் தகுமோ
என்றுள்ளிலெண்ணி தீர்மானம் செய்துடனே
எம்பிரான் தானமர்ந்தோங்கும் ரதம்தானாய்

தன்தோளில் ராகவனை எற்றாஞ்சனேயன்
தகுந்த மாண்ரதமாகி ரணகளத்திலக

இளையபெருமாளுக்கு அங்கதன் ரதமாய்
இணையற்ற தன் தோளின் மீதேற்றியோங்க

இவ்விதமதாய் ராமனும் லெக்ஷ்மணனும்
இடிநிகர் பாணங்களெய்து ராக்கதரை

கால்வேறு கைவேறு தலைவேறு உடல்வேறாய்
கணையேவி கண்டதுண்டமதாக்கி மென்மேல்

அசுரேசனிட படைகள் யாவையுமொழித்து
ஆண்சிங்கம்போல் ராமனும் லெக்ஷ்மணனும்

சமர்களத்தில் பெரும் குருதியார்பெருக
சார்ந்ததிலிறந்தேகும அசுரர் தேஹத்தை

நரிகழுகு நாய்காக்கை யாதிஜெந்துக்கள்
நமக்கின்று நல்விருந்தென்றெங்கும் சூழ்ந்து

விரைவாக ரக்தாற்றில் மிதந்தாழ்ந்துமேமிக்க
வேகமாய்ச்செல்லும் பிணங்களை யிழுத்து

கொத்திக் கடித்துப் பிடுங்கித்தின்னவுமாக
கோதண்டதாரனும் சௌமித்திரியும் செய்ய

தசக்ரீவன் தன்னுடைய சேனைகள் யாவும்
தாவாக்கினியில்பட்ட சருகுபோல் தீய

குசலம் சிறிதும் தனக்கின்றி யமர்களத்தில்
குன்றிய மனத்துடன் எகனாய் நிற்க

அச்சமயம் ஸ்ரீராமசந்த்ரனவனைப் பார்த்து
அன்புளங்கூர்ந்து திருவாக்கொன்றறைந்தான்

இலங்கையிலிருந்து மூவுலகாதிபத்யம்
இமையவர்களும் பணியபுரியும் ராவணனே

இனியாகிலும் என் மனைவி ஜானகியை
என்னிடம் ஒப்புவித்தெனை சரண்புக்கால்

அநியாயமாக இதுவரையில் மாண்டவர்போக
அசுரர்மீந்திருப்பவர்களோடு நீசுகமாய்

பனிமலை வாஸனிடதிருத்தாட்கள் போற்றி
பண்புசேர் லங்கைமாநகராண்டு வாழ்வாய்

இன்று நீயுன்னரண்மனைக்கேகி நீயுள்
இசைந்தபடியோசித்து தீர்மானம் செய்து
ஜானகியை விட்டுவிடவோ அன்றியுத்தம்
சதிராக செய்திடவோ என்பதுவை நீயாய்
செம்மையாயாராய்ந்து யோசித்து நாளை
ஜெயமற்ற ராவணாவாவென்றனுப்பி
கருணையோர் வடிவான காகுத்தன் மகிழ்வாய்
கபிவரர்கள் புடைசூழ்ந்து கைகூப்பியேற்ற
தருணி ஜானகியை சிறைமீட்கும் ரகுவீரன்
தம்பியுடன் பாசறையிலோங்கியிருந்தானாம். (ஏலேலோ)

(10) இந்தவிதமிலங்கேசன் படைகள் யாவற்றும்
இனகுலேசன் கையாலொழிந்தேகனும்
அந்தமிகும் ரதம் சாரதிப்பரிகளாதி
அதிக்ரூரமான அஸ்த்ரங்களாயுதமும்
செந்தணலில் பட்டழியும் சருகுபோல் யாவும்
ஜெகதேக வீராமன் கணையாலொழிய
சிந்தையில் அதிதுயரம் எய்தி தசக்ரீவன்
சீக்கிறம் தன்னரண்மனை சேர்ந்துமேதான்
எந்தவிதமாக என் சத்துருக்களை வென்று
என் மனஸ்தாபம் தீர்ந்துன்மகிழ்வதென்று
பற்பலவிதமதாக யோசித்துமே தான்
பண்பான அன்னபானாதியுட்கொளாமல்
கற்பரசி மனைவி மண்டோதரியின் முகமும்
காணமனமின்றி தன் கருத்தில் நலிவுற்றும்
புஷ்ப சயனத்தில் கிடந்து ராத்திரி முழுதும்
புரண்டுப்புரண்டயர்ந்தும் நித்ரையின்றி
நிஷ்பக்ஷபாதமாய்த் தோன்றிமறையும் சூர்யன்
நீர்மையாகவெ உதிக்கும் முன்னெழுந்து
தன்னுடைய கர்மானுஷ்டானங்கள் யாவும்
தவறாமல் செய்துடன் போர்க்கோலம்கொள்ள
கன்னல்மொழியாள் மண்டோதரி வந்து சிலநீதி
கழறவே அவளைதிக்காரம் செய்தேதான்

நால்வகைப்படைகள் புடைசூழ ரணபேரி
　　நன்றாய் முழக்கி சமர்களம் சேர்ந்துமேதான்
பால்வண்ண சங்கோசையும் சிங்களுதம்
　　பாரதிர வில்லின் ஞாணோசையும் செய்ய
சூரிய குலோத்பவ ஸ்ரீ ரகுவீரனும் வேகம்
　　சுறுசுறுப்பாக வில்லேந்திதானோங்க
வீரியமதாய்க்கையில் தனுசேந்திலெக்ஷ்மணனும்
　　விரைவாகவே ராமனுடன் தானுமோங்க
காரியங்கள் யாவும் உணர் ஜாம்புவானும்
　　கபிஸயினியங்களை சமர்க்கோலமாக்க
ஆரவாரமதாக சுக்ரீவனுதி
　　ஆற்றல்மிகும் வானரச்சேனைமூஹம்
கடல் போலொலிக்க கர்ஜித்துமென்மேலும்
　　காகுத்தனுக்கொப்போல் கடும்போரிழைத்தும்
தருக்கள் மலைகள் குன்றுகளைப் பேர்த்தெடுத்து
　　தசகண்டனுடைய சேனைகளைப் புடைத்து
அரக்கர்களைக் கபிகள் மாய்க்கலங்கேசன்
　　ஆர்ப்பாட்டமாக தன்னிருபது கைகளிலும்
உருக்கினால் செய்த பற்பல படைகளேந்தி
　　ஊர்ஜிதமாய் தன் சேனைக்குற்சாகமூட்டி
தன் வில்லில் பற்பலகணைகள் தொடுத்து
　　தாசரதியைத்தாக்க தக்ஷணம் ஹநுமான்
தன்தோளின்மீது ஸ்ரீராமனைத் தாங்கும்
　　தருணமங்கதன் தோளில் லெக்ஷ்மணனுமோங்கி
பன்முறை இடசாரி வலசாரியாக
　　படுகளத்தில் ராமலெக்ஷ்மணனும் சூழ்ந்து
கன்மவசத்தாலிலங்கேசன் மடிந்துக்
　　காலனுலகெய்தும்காலம் கிட்டியதனால்
ராமராவணயுத்தமதைக் காணவிண்ணோர்கள்
　　ராஜாங்கமாய் வானிலடர்ந்து சூழ்ந்தோங்க
அதிமூர்க்கமாக ஸ்ரீராகவன் மீதும்
　　அவுயம்சலெக்ஷ்மணன்மீதும் பலபகழி

விதவிதமதாய் விடுத்ததிகோரமாக
வீராதிவீரனவர் மேனியை துளைத்தும்
எதிரிலுறும் வானரச் சயினியங்களையும்
ஏககாலத்தில் தான் படுசூர்ணமாக்கி
மிதமிஞ்சி ராவணன் செய்போரில் ராமன்
மேனிமுழுதும் ரக்தமயமாகவேதான்
ஆற்றொண முனிவுற்றுக் கோதண்டமதனை
அக்ஷணம்தான் வளைத்தம்புகள் தொடுத்து
நாற்றிசையிலும் ராமபாணங்கள் சூழ்ந்து
நலமற்ற அசுரரைச்சண்டமாருதமாம்
காற்றிலகப்பட்ட யிலவம் பஞ்சுபோலும்
கனலிலிடப்பட்ட சருகாய்த்தீய்ந்து ஒழியும்
வாறுகஅசுர சேனைகளை வாட்டி
வானவர் துயரற்று இன்பமாயோங்க
சீராக ராமன்கணைவிடுத் தசுரனுடைய
சிரம்பத்தையும் கொய்து கொய்தும் முளைக்க
சூராதி சூர ஸ்ரீராமன் திகைத்துள்
சுணங்கும் தருணம் சமயஸஞ்சீவிபோல
நேராகவே விபீஷணன் சொன்னவண்ணம்
நெடிய கோதண்டதரன் ராவணன்மார்புள்
நிலையாயிருந்திலகு மமுதகலசத்தை
நிமிஷம் கணையால் பேதித்ததனை தூளாக்கி
மலைமகள்சுதன் சுப்ரமண்யனால் ஞானம்
மாக்ஷியாய்ப்பெற்ற கும்போத்பவன்பண்டு
கலையெலாமுணர்ந்த ஸ்ரீராமனுக்கன்பாய்
கதிரவன்றுதியான ஆதித்யஹ்ருதயம்
பலனெய்த உபதேசம் செய்தமந்த்ரத்தை
பாங்காக கோதண்டமேந்திச் செபித்து
நிலமிசைராவணனை மாய்க்கவென்றேதான்
நிமிஷத்திலோர் திவ்யாஸ்த்ரத்தைதன் வில்லில்
நிலைசற்றும் தவறுதவிதமாய்த் தொடுத்து
நீர்மையாய் தசக்ரீவன்மீதுதானெய்ய

கைலையங்கிரியை பேர்த்தெடுத்தவனுமாயெட்டு
கரிகள் கொம்புகளை தன் மார்பதக்கமதாய்
பலஜீவாத்னங்கள் பதிப்பித்ததைத்தன்
பறந்தமார்பில்பூண்ட பலவானுமாயும்
பல பலவிதத்திலுமுயர்ந்தவனுமாயும்
பரமேஷ்டியின் பேரனுயும் விளங்கி
நலிமிகச்செய்து மூன்றுலகையும் ஆண்ட
நலமற்ற ராவணன் சிரங்களீரைந்தை
ஸ்ரீராமனதிக்ரூரமானதோர் கணையால்
சின்னபின்னமதாகத் துண்டித்தவுடனே
பாராதி விண்ணோர்களைத் துன்புறுத்திப்
பகவொரணகண்டகனெனும் பேர்படைத்த
வீராதி வீரராவணன் ஜீவனற்று
விதியாதியோர் மகிழ மாண்டொழிந்தானும் (ஏலேலோ)

(11) இவ்விதமாக ராவணனை வதைத்த
இணையற்ற ஸ்ரீ ராமச்சந்த்ரனைவிண்ணோர்
அவ்வமயமம்பரத்திற் புடைசூழ்ந்து
அஸ்தங்களைக்கூப்பி போற்றிப் புகழ்ந்து
செவ்வையாய்த் தேவதுந்துபியை முழக்கி
ஜெகதேகவீர ஸ்ரீராமன்மீதழகாய்
திவ்யமாகிய புஷ்பவருஷம் சொரிந்து
தீராதுயர் தீர்த்ததிருமால்ஸ்வரூபா
என்று பற்பலதுதிகள்விண்டமரரெல்லாம்
எற்றபுளகாங்கிதம் பூண்டுள் மகிழ்ந்து
ஜெயவிஜீபவ ராமச்சந்த்ரனே சரணம்
செல்வி ஜானகி மணவாளனே சரணம்
ஜெயவிஜயரின்ரெண்டாம் ஜென்மம் தீர்த்தாட்கொள்ள
ஜெகமிசையுதித்த ஸ்ரீராகவா சரணம்
பயபவமாதிகளைப் போக்கி யடியார்க்கின்பம்
பாவிக்கும் ரகுவம்சதிலகனே சரணம்
என்றிவ்விதமாக போற்றிபுகழ்ந்தமரர்கள்
ஏற்றதாகிய தம் தம் ஸ்தானங்களெய்த

கோதண்டதாரனை ஸ்ரீ ராமச்சந்த்ரன்
கொடிய ராவணனுக்கு நீர்க்கடன்களாதி
ஏதொன்றும் குறைவின்றியே விபீஷணனால்
ஈமக்ரியை முறைபோல் யாவும் நடாத்தி
கேதந்தவிர்த்திலங்கை ராஜ்யபாரம்
கேழ்வன் விபீஷணனுக்குச்சூட்டியேதன்
பாதந்தனைத்யானித்தேர்க்கும் ஜானகியை
பாவகத்தில் மூழ்கச்செய்து தானேந்று
அன்பன் விபீஷணன் அடிபணிந்தேற்ற
அரியபுஷ்பகவிமானத்தமர்ந்தழகாய்
இன்பமாய் ஜானகியும் சௌமித்திரியும் தன்
இருபுரத்திலுமமர்ந்துள் மகிழ்ந்திலக
வானரச்சைன்யங்கள் வெள்ளமெழுபதுவும்
வாயுஸூனும் சுக்ரீவனாதியரும்
அதிமகிழ்வாகலங்காநகர் விட்டு
அதிவேகமாக சாகேதைசெல்வழியில்
மதியுவந்துப்பரத்வாஜர் வேண்டல் போல்
மாகூடிசேர் கோதண்டதரனங்கு தங்கி
பதினன்கு ஆண்டு நேற்றயதினத்துடனே
பாங்காக பூர்த்தியாய்விட்டதாலின்று
நேராக ஐயோத்தி நான் சேராவிட்டால்
நிச்சயம் பரதனக்கினியில் வீழ்ந்தொழிவான்
என்றெண்ணி மாருதியிடத்தில் ஸ்ரீராமன்
என்வரவை பரதனுக்கறிவித்து வேகம்
குன்றிடாவண்ணமிங்கெய்துவா யென்றகா
குன்தனைக்னைப்போலவே யாஞ்சனேயன்
அம்பரந்தாவிநந்திக் ராமமெய்தி
அத்தருணம் பரதனங்கிக்குழியை வலமாய்
உம்பருங்கண்டக்தோ அந்தோவெனத்தான்
ஊர்ஜிதமாய் ரெண்டுப்ராதக்ஷணம் வந்து
நம்பியிதுவரையிலும் நானிருந்தேன் உன்
நல்வரவை காணாததாலடியேனிப்போ

எம்பிரானே உன் திருவடிக்கபயம்
என்றுரைத்துப்பரதன் அக்கினியில் பாயும்

அச்சமயம் வானத்திலேயாஞ்சனேயன்
அண்டர்களாதியரும் கேட்டுமகிழ்வெய்த

வந்தான் வந்தான் ராமன் வந்தானென்றறைய
வாய்மைசேர் பரதாழ்வான் வானத்தை நோக்க

சந்தோஷவார்த்தையாய் ராகவன் வரவை
சவிஸ்தாரமாய்ப்பரதன்பால் சாற்றி ஹநுமான்

சந்தேஹமற வேகம் ராமனுக்கினிய
சங்கதியுரைக்கமிக சாவதானமதாய்

முனிஸ்ரேஷ்ட பாரத்வாஜர் செய்விருந்துண்டு
மூவுலகும் புகழ்ந்தேற்றும் ஸ்ரீராமன்

தனதரியசாகேதைசெலும் முன்னமே நற்
றகமைசேர் பரதாழ்வானதி விநோதமதாய்

நகரையலங்காரம் செய்வித்துமாக்ஷிமையாய்
நால்வகைப்படைகள் புடைசூழ்ந்தோங்கவும் தன்

அகமகன்றது என்றுள் ஆனந்தமெய்தி
ஆச்சார்யரான வசிஷ்டரைதான் முன்னிட்டு

சுமந்திரர் சத்ருக்னனுதிசஹிதமதாய்
சுபபூர்ணகும்பம கற்பூர தீபங்கள்

சுபமங்களம்பாடி சுமங்கிலிகளேந்த
சுத்தபரவஸ்துவாம் ராமனை நாடி

வேத வேதியர்கள் நான்மறைகளை முறைபோல்
விமரிசையதாயோதி புடைசூழ்ந்துவரவும்

கரி பரிகளொட்டகம்காளை பசுக்கள் சூழ
கனமாக பதினெட்டுவாத்யம் முழங்க

ஸ்ரீராமனை யெதிர்கொண்டு பரதாழ்வான்
ஸ்ரீகரமதாயண்மனை சேர்ந்த உடனே

காராம்பசுக்கன்றை கண்டோடி வருகின்ற
காக்ஷிபோல் கௌசலையும் சுமித்திரையும் வேகம்

நேராக வந்து ஸ்ரீராமலெக்ஷ்மணரை
நெஞ்சமிசையப்பிகொண்டாசி பல சாற்றி

காரார் குழலி ஸ்ரீஜானகியை தங்களிரு
கைகளால் தழுவிதம் மார்புரச்சேர்த்து
ஆராமனத்துயரம் கதிரோன்முன்பனிபோல்
அக்ஷணத்தினிலற்றும் ஆனந்தமெய்தி
கற்பெனும் விரதத்தை கைகொண்டுதிகழும்
கண்மணி ஜானகி உன்னாலென்மக்கள்
பற்பலக்கஷ்டங்கள் பட்டேயிறுதியிலின்பம்
பாங்காயடைந்தாரென் றஸறந்தாசி கூறி
ஓங்கும் தாயார்கள் மூவர்க்குமுள்ளன்பாய்
ஒப்புயர்வில்லா ஸ்ரீராமலெக்ஷ்மணனும்
தாங்காத வெந்துயர் அற்றின்பமுறவே
தாயார்கள் பாதங்களைப் பணியசீதை
மாங்குயில் குரல்போன்ற மதுரவாக்காய்த்துதிகள்
மலர்கரம் குவித்துறைந்துள்ளன்பாய்பணிய
சித்தசுத்தியதாய் ஸ்ரீராமலெக்ஷ்மணனும்
சிரமேற்கரங்கூப்பி வசிஷ்டரையும் போற்றி
உத்தம மந்திரி சிகாமணியாம் சுமந்திரரை
உள்ளன்புடன் போற்றி உபசாரம் சாற்றி
தத்துவமுணர் பரதனும் சத்ருக்னனனும்
தாசரதியைப்பணிந்தனுஜன் லெக்ஷ்மணனை
மெத்தவும் புகழ்ந்தேற்றி இன்ப மேலிட்டு
மென்மேலும் ஆனந்தமெய்தி மகிழ்வுறவும்
இத்தகையவிதமாக சகேதை நகரில் வாழ்
இயாவரும் உள்மகிழ்ந்தப்பண்டு ராமன்
உத்தமபத்தினியும் அநுஜநும் பின் அடர
ஊர்ஜிதமாய்க்கான்புக்க சமயத்திலவர்கள்
சித்தமிகநொந்தயர்ந்துதங்கள் கண்களில்
சிறிதும் நிற்காமல் பெருகும் கொடியதுயர்நீர்
அத்தருணம் ஸ்ரீராமனாதியரைக்கண்டவுடன்
ஆனந்த பாஷ்பமாய் மாறி மகிழ்வெய்த
இத்திருச்சுபகரமதாக ஸ்ரீராமன்
இணையற்றதான தன்னரண்மனையிலோங்க

உத்தமப் பரதனும் சத்ருக்னனுதி
உயர்குருவ ஸிஷ்டர் மந்திரி சுமந்திரரும்
எத்திசையிலுள்ளோரும் கண்டு கேட்டுமகிழ்ந்
தேற்ற சந்தோஷஸாகரத்திலாழ்ந்தாராம் (ஏலேலோ)

(12) அமராதியோர்களுக்கபயப்ரதானம்
அன்புடன் பாலாழியில் செய்தவிதமாய்
சமமிலா ஸ்ரீலெக்ஷ்மிகாந்தனில்வுலகில்
சாகேதையில் ராமனுயவதரித்து
இமையோர்களாதியரை வருத்தும் ராவணனுதி
இயாவற்றரக்கரையும் வேரோடொழித்து
தமசமாதிகள் மேவும் முனிக்குழாங்கட்குத்
தகுந்த சௌகரியங்களெல்லாம் செய்வித்து
ஜானகியை சிறைவிடுவித்தாட்கொண்டுதானதிக
ஜாகருகமதாயயோத்தி நகர்மேவ
மானவஸ்ரேஷ்டரும் தேவர்முனிவோரும்
மனமகிழ்ந்துப்போற்றும் ஸ்ரீராமனுக்கு
ஆனதிருமகுடாபிஷேகோத்ஸவத்தை
ஆகமம்போல்மிக்க மேலாய் நடாத்த
பாநுகுல குருராஜபௌரோஹித்யஸ்தானம்
பாங்காகவே பெற்றவஸிஷ்டராக்ஞைப்போல்
தானதிக உத்ஸாஹமேவிபரதாழ்வான்
தகுந்த கார்யங்கள் யாவும் தயாராக்கி
மானிலத்தினிலேம்பத்தைந்து தேச
மன்னர்களுக்கும் சுபசேதியறிவித்தும்
சீர்மேவுமய்யோத்தி மாநகரம் முழுதும்
ஸ்ருங்காரமாக பற்பலவிதானங்கள்
ஆர்வமுடன் செய்வித்துவரும் மன்னருக்கும்
அழகாயிருக்க பலஜாகைகளமைத்தும்
குலை வாழை கமுகு மாவிலை தோரணங்கள்
குசலமாய்ப்பட்டணமுழுதும் காட்டுவித்தும்
ப்ரமக்ஷத்ரியவைச்ய சூத்திரர்களாதி
ப்ரபலகனதனவான்களும் வித்வாமிஸரும்

எண்டிசையிலுள்ளோரும் அயோத்திகர் சேர்ந்து
எழுகடல் முழக்கம்போல் சூழ்ந்தோசையோங்க

இவ்விதம் ராமபட்டாபிஷேகத்திற்
கிசைந்த கார்யங்கள் யாவும் தயாராக

முனி குலோத்துங்கராய் விளங்கும் வசிஷ்டர்
மூவுலகும் போற்றும் ஸ்ரீராமனுக்கு

பனுவல் சொல் முறைபோல் பற்பல புண்யதீர்த்தங்கள்
பண்பாய்க்கொணர்வித்து ஜெபமண்டபத்தில்

அநுகுணமதாக கும்பஸ்தாபனங்கள்
ஆகமம்போல் செய்வித்ததிஸ்ரத்தையாக

மனுகுலோத்துங்க ஸ்ரீராமன் முடிசூடும்
மாக்ஷிமிகும் பட்டாபிஷேகத்திற்கான

தன தான்யமாடையாபரணமேராளம்
தகுந்துயர் பட்டாபிஷேககாலத்தில்

அணுவும் குறையாமலதி தாராளமாக
அரசுமுடிசூட்டும்மண்டபத்தில் குவித்து

வினயமாய்ப்பரதன் வசிஷ்டர்பாலெய்தி
விமரிசையதாய் ராமசந்த்ரனுக்கழகாய்

ஐயோத்திபுரியாக்ஷிமுடிசூட்டுதற்கெம்
ஆண்டவனெயாவும் தயாராயிற்றென்று

வாயால்புகன்று திருவடிபணிந்தேற்ற
வண்மைவாய்ந்திலகும் வசிஷ்டமாமுனிவர்

சதுர்வேதபாரங்கதர்களாயும்மிக்க
சாந்தஸ்வரூப முனிவர்களுடன் தானும்

அதிமனோஹரவேதம் நான்கையும் ஓத
அரிவையர் சூழ்ந்து சுபசோபனம்பாட

கன்னியரனந்தம்க்ருத தீபங்களேந்த
காகுத்தன் பட்டாபிஷேககாலத்தில்

பொன்னினால் செய்பூர்ணகும்பங்கள்பலதும்
பொருத்தமாய் கற்பூர தீபமுமிலங்க

இன்னிசைக்கருவியுடன் பாடகர்கள் கானம்
இன்பமாய்ச்செய்ய நாட்டியமாதராட

மன்னுலகெலாம் செழித்தோங்க திருமகுடம்
மாக்ஷிமிகும் ஸ்ரீராமன் சூடுதற்குரிய

பன்னலமருள்புண்ய தீர்த்தகும்பங்கள்
பாங்காய் ஜெபங்கள் செய்துளதை வசிஷ்டர்

தன்னுயர்கரங்களாலேந்தி யுள்ளன்பாய்
தாசரதிக்கபிஷேகம் செய்தருணந்தனிலே

குருமுனிவர் சொல்போல குசலமாய் சீதைகா
குஸ்தனிட பாகத்தில் குளிர்முகமாயமர

பொன்னிறல் கட்டமைத்துள்ள வெண்சங்கோசை
பூரித்து ஹோங்காகார சப்தம் முழங்க

விண்ணவர்களம்பரந்தனில் புடைசூழ்ந்து
விரிவாய் கற்பகமலர்மாரி வருஷித்தும்

எண்ணரிய தேவதுந்துபியை முழக்கி
எங்கள் குறைதீர்ந்தின்பமெய்தினோமென்றும்

கண்களில் ஆனந்தபாஷ்பம் சொரிந்து
காகுத்தன் மாக்ஷிமையை புகழ்ந்துகொண்டாட

நாரதர் தும்புராதியர்பாட விண்மாதர்
நாட்டியம்செய்ய யோகியர்கள் துதிக்க

மங்களமாய் மூவ்வாறு வாத்யம் முழங்க பூ
மண்டலாதிமர்கள் கைகட்டி சேவிக்க

செங்கைகள் சிரமின் மீதேற்றி சுக்ரீவனும்
ஜெயவிஜீபவாவென்று குகன்விபீஷணனும்

திங்கள்முக ஸ்ரீராமசந்த்ரனை சேவித்து
திருவுளமகிழ்ந்துப்ரம்மானந்தமெய்த

இத்தகைய மாக்ஷிமைகளோங்கும் சுபலக்கனத்தில்
இணையற்ற புகழ்வாய்ந்து விளங்கும் வசிஷ்டர்

சத்வகுணஸம்பூர்ண ஸ்ரீராமனுக்கும்
சாக்ஷாத் ஸ்ரீ லெக்ஷ்மியாகிய ஜானகிக்கும்

நித்யமங்களமாக வாழ்கவென்றபிஷேகம்
நீர்மையாய்ச்செய்து திருமகுடமும் சூட்ட

பக்தர் சித்தர் முக்தர் புலவர் பாவலரும்
பாராளும் பார்த்திபாரனைவருமெங்கள்

அத்தனே அடியேங்களைப் பாதுகாத்திந்த
ஐயோத்தி நகராக்ஷி ஆசந்த்ரார்க்கமதாய்
சத்யதருமத்தை நிலைநாட்டி ஓங்குக வென்று
சகலமானவரும் துதிக்க ஸ்ரீராமன்
எத்தகைய துயருமணுகாமலுங்களை நான்
எக்காலமும் காப்பேனெனும் வாக்களிக்க
அத்தருணம் பட்டாபிஷேக மண்டபத்தில்
அடர்ந்து புடைசூழ்ந்தோங்குமனைவரும் மகிழ்வாய்
சித்தமிசை ஆனந்த மெய்தி மென்மேலும்
சிறப்பாக பல்லாண்டுபாட மங்களமாய்
உத்தமப்பரதாழ்வான் வெண்குடை பிடிக்க
உயர்கவரி சத்ருக்கன் லெக்ஷ்மணனும் போட
பக்தியாய நுமன் திருவடிதாங்க ஸ்ரீராமன்
பண்பாக திருமகுடம் பூண்டோங்கினனும் (ஏலேலோ)

(13) இத்தகைய ராமாவதாரச் சிறப்பை
இணையற்ற சான்றோர்களளவற்ற விதமாய்
தத்தம் மதிக் கேற்றவாறாக பலகவிகள்
தாசரதியின் மாக்ஷி விளக்கியுள்ளோரில்
உத்தம முனிஸ்ரேஷ்டரான வான்மீகர்
உயர்தேவபாஷையில் ஸ்லோகமாய்த்தானிரு
பத்திநாலாயிரம் க்ரந்தங்களாய்ச் செய்து
இமையோரும் புகழ்கீர்த்தி வாய்ந்துச் சிறந்தார்
இத்தரையில் கவிராஜ ஸ்ரேஷ்டராகிய கம்பர்
இனிய தமிழில் பன்னீராயிரப் பாக்கள்
சுத்தமாய்ச் செய்ததையும் இசைத்து அருணசலன்
சுருதிலய மமைய கீர்த்தனமாக்கி தந்தான்
எத்தனை விதத்திலு மியற்றிடினும் ராமகதை
எங்கெதைக் கேட்டாலும் மகிழ்ச்சியே நல்கும்
இத்தகைய ராமசரிதம் கப்பல் பாட்டாக
இயற்ற வெனுமாவ லென்னுள்ளில் வேரூன்ற
எத்துணை கொண்டிதை பூர்த்திசெய்வேனென்ற
ஏக்கமென் மேலிட்டு சிந்திக்க யெந்தன்
உத்தமக்குரு சிவானந்தரின் க்ருபையாலும்
உமைசுதன் ஸ்ரீசுப்ரமண்ய னருளாலும்
வரகவி வெங்கடராயனென்னும்யான் சொன்னதில்
வண்மைவாக்கின்றி பல வழுக்குகளுற்றாலும்
பெரியோர் தம்மக்களின் சொல்கேட்டு மகிழ்தல்போல்
பேதையென்வாக் கேற்கவென்று பணிந்தேனே.(ஏலே.)

# மங்களம்.

மங்களம் மங்களம் பவன்துதே—என்ற மெட்டு

இராகம் சுருட்டி தாளம் ரூபகம்

பல்லவி

மங்களம், மங்களம், நித்தியம் சுபமங்களம் மங்களம்

அநுபல்லவி

செங்கையில் கோதண்டம், செழிக்கும், சீதாபதிக்கு (ம)

சரணம்

வானவர் முறைகேட் பயமீந்தயோத்தியாள்
வண்மைசேர் தசரதன் ஸுதனுயவதரித்து
மானவஸ்ரேஷ்ட கௌசிகன் வேள்வி முடித்தான்
மாவில்லை யொடித்து சீதையை மணந்தவனுக்கு (ம)

2

பரசுதானைகர்வ பங்கமாக்கி யூரெய்தி
பாராளும் அரசாக்ஷி சிற்றன்னையால் வெறுத்து
கரிசனமிகும் பத்னி அநுஜனுடனே வனம்
களிப்பாய்புக்கும் குகனுல் கங்கைகடந்தோனுக்கு (ம)

3

பரதனுக்குவந்துப் பாதுகையீந்தும் இளையோனுல்
பாபிசூர்பனகையை பங்கமும் செய்வித்து
பரிதிச்சேயின் ஸக்யம் பவனஸுனுவால் பெற்று
பலவான் வாலியை மறைந்திருந்து மாய்த்தவனுக்கு (ம)

4

மாருதியால்சீதை யிருக்கும் யிடம்தெரிந்து
மலர்த்தாட் பணிந்த விபீஷணனையும் ஆட்கொண்டு
வாரிதியில்ஸேது கட்டிவானரப்படைகள்
வணங்கிப் புடைசூழ்ந்தோங்க இலங்கை சென்றவனுக்கு (ம)

5

தசமுக ஸம்ஹாரம் செய்தும் ஸீதாஸமேதம்
தகுந்தமாண்புகழுடன் ஸாகேத புரிசேர்ந்து
குசலமாய்த்திருமுடி புனைந்து வெங்கடராயன்
கூறும்செந்தமிழ்க்கருள் கூரும்ஸ்ரீராமனுக்கு (ம)

# விளம்பரம்.

இந்தக்ரந்த கர்த்தாவினால் இயற்றியிருக்கும் ஸ்ரீனிவாஸ கல்யாணம், தக்ஷயாகம், ஸ்ரீ பார்வதி கல்யாணம், மயூரத்வஜோபாக்யானம் என்னும் சரித்திரங்களும், திருவிசநல்லூர் ஸ்ரீ ஐயாவாள் சரித்திரம், கோவிந்தபுரம் ஸ்ரீமத் போதேந்த்ர சுவாமிகள் சரித்திரம், மந்த்ராலயம் ஸ்ரீமத் இராகவேந்திர சுவாமிகளவர்கள் பேரிலும், திருக்கோவிலூர் ஸ்ரீமத் இராகோத்தம சுவாமிகளவர்களுடைய சரித்திர ஸங்க்ரஹ விருத்தங்களும், கீர்த்தனங்களும், ஸ்ரீமத் ராமாயண ஸங்க்ரஹக் கோலாட்டப்பாட்டுகளும் கூடியசீக்கிரத்தில் அச்சிட்டு வெளியிடப்படும்.

இங்ஙனம்,

அடியார்க்கடியன்,

சேலம் வரகவி, S. T. வெங்கடராவ்